சித்த மருத்துவ நிபுணரின்
ஆலோசனையின் படி
தயாரிக்கப் பெற்ற
ஆனந்தம்
சீயாக்காய் பவுடர்
கிடைக்குமிடம்:
யாழ். நகர் குகன் களஞ்சியம்,
அம்பிகை களஞ்சியம்,
சிவசக்தி களஞ்சியம்,
ரூபா பல்பொருள்
வாணிபம் திருநெல்வேலி
கனகா பத்திரிகை.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

இதோ வந்துவிட்டது
இயற்கையின்
வரதெட்சணை
ஆனந்தம்
சீயாக்காய் பவுடர்
பாவித்து
பயன் பெறுங்கள்
(ஜி-380)

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 17 புதன்கிழமை (01 - 03 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 97

# யுத்தக் கைதிகள் 16 பேர் இன்று முதல்-
# சாகும் வரையிலான உண்ணாவிரதம்!

## 15பேர் பொலீஸார்; ஒருவர் சிப்பாய்

யாழ்ப்பாணம், மார்ச் 1

கடந்த சுமார் ஐந்து வருடங்களாக விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள ஸ்ரீலங்காப் பொலீஸார் 15 பேரும், ஸ்ரீலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவரும், தமது விடுதலைக்கு உரிய நடவடிக்கை எடுக்கும்படி அரசாங்கத்தை வற்புறுத்தி இன்று காலை 8 மணி முதல் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கிறார்கள்.

இன்று முதல் அடுத்த ஏழு நாட்களுக்கு நீராகாரம் அருந்தி தாங்கள் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும்—

அக்காலத்துக்குள் தங்களை விடுவிக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் அதன்பின், எந்த ஆகாரமும் உட்கொள்ளாமல் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் —

யுத்தக் கைதிகள் நேற்று மாலை இடம்பெற்ற செய்தி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு பணிப்பாளராக புலந்திரன்

யாழ்ப்பாணம், மார்ச். 1

யாழ்ப்பாணம் நல்லூர் கல்விக் கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளராக இதுவரை பணியாற்றி வந்த திரு புலந்திரன், முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

முல்லைத்தீவு பணிப்பாளர் பொறுப்பை உடனடியாக

(6ஆம் பக்கம் பார்க்க)

"முச்சந்திமுரளி"



வருசத்துக்கு ஒரு வலயம்...
குட்டி போடுது போலை......!

## சென்னை மத்திய சிறையிலிருந்து 9 புலிப் போராளிகள் தப்பினர்!

### இருவர் பின்னர் கைதாகினர் என அறிவிப்பு

சென்னை, மார்ச். 1

சென்னை மத்திய சிறைச்சாலையிலிருந்து ஒன்பது விடுதலைப்புலிப் போராளிகள் நேற்று முன்தினம் இரவு தப்பிச் சென்றுள்ளார்கள் என்றும், இவர்களில் இருவர் மீண்டும் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மற்றொருவர் தமிழ்நாடு ஆந்திரப்பிரதேச எல்லையை நேற்றுக் காலை கடக்க முயற்சி செய்தபோது காவல்துறையினர் அவரைப் பிடிக்க முயன்றனர் என்றும், அப்போது அவர் "சயனைட்" விஷம் அருந்தி உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், கைதிகள் தப்பிச்சென்றது குறித்து நீதி விசாரணை நடத்த தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் இந்த நீதி விசாரணையை மேற்கொள்வார்.

இது இவ்வாறிருக்க தப்பிச் சென்ற கைதிகளைப் பிடித்த காவல்துறையினர் 10 பேருக்கு அவர்களது பணியைப் பாராட்டி பதவி உயர்வு

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பொருளாதாரத் தடையை நீக்கி எமது விடுதலைக்கு உதவுங்கள்!

### காவலில் இருக்கும் பொலீஸ் கைதி கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 1

"வட.—கிழக்கு மாகாணம் மீது ஸ்ரீலங்கா அரசு விதித்துள்ள பொருளாதாரத் தடையை முற்றாக நீக்கி தமது விடுதலைக்கு உதவுமாறு ஸ்ரீலங்கா அரசை வலியுறுத்தும் வகையிலேயே நாம் இன்று உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கிறோம்."

—விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள யுத்தக் கைதிகளில் ஒருவரான —அம்பாறையைச் சேர்ந்த— டி ஜி தர்மவர்த்தனா என்ற பொலீஸ்காரரே மேற்கண்டவாறு கூறினார்.

நேற்று மாலை நடந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈழப் போர் 2 ஆரம்பமான சமயம் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட நாம் கடந்த ஐந்து வருடங்களாக யுத்தக் கைதிகளாக இருக்கிறோம்.

நாம் எமது விடுதலைக்காக இரண்டு தடவை உண்ணாவிரதம் மேற்கொண்டோம்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தக் கைதிகள் சந்திரிகாவுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச். 1

தமது உண்ணாவிரதப் போராட்டத்துக்கு உரியமதிப்புக் கொடுத்து தமது விடுதலைக்கு உதவுமாறு கோரி- 16 யுத்தக்கைதிகளும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு கூட்டாகக் கடிதம் ஒன்றை இன்று அனுப்பவிருக்கின்றனர்.

கடந்த 5வருடங்களாகசிறையில் வாடும் எம்மைவிடுதலை செய்ய ஆவன செய்யுமாறும்—

எம்மை விடுதலை செய்வதற்கு புலிகள் முன்வைத்துள்ள கோரிக்கையை ஏற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும்—

அந்த கடிதத்தில் தாங்கள் கோரவிருப்பதாக உண்ணாவிரதிகள் தெரிவித்தனர்.

இந்தக் கடிதத்தின் பிரதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாவின் பிந்திய கடிதம் சந்திரிகாவின் தீவிர பரிசீலனையில்

கொழும்பு, மார்ச் 1

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவுக்கு அனுப்பிவைத்துள்ள பிந்திய கடிதத்தை ஜனாதிபதியும் அவரின் ஆலோசனைச் சபையும் பரிசீலனை செய்து வருவதாக ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டி தெரிவித்திருக்கிறார்.

தமிழீழத் தேசியத் தலைவரின் கடிதம் குறித்து பாலபட்டபெண்டி மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளின் முன்னைய ஐந்து கோரிக்கைகளே

பாலபட்டபெண்டி தகவல்

இக்கடிதத்திலும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

★ பூநகரி முகாமை முற்றாக அகற்றுதல்.

★ எரிபொருள் உட்பட அத்தியாவசியப் பொருள்கள் மீதான பொருளாதாரத் தடையை முற்றாக நீக்குதல்

★ கடல்வலயத் தடைச் சட்டத்தை நீக்கி மீன்பிடித் தொழிலுக்கு அனுமதித்தல்

★ போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தை நிரந்தர யுத்தநிறுத்தமாக மாற்றும் உடன்பாட்டைக் காணுதல்.

★ வடக்கு, கிழக்கு புனரமைப்பைக் கண்காணிப்பதற்கு புலிகள் பிரதிநிதிகள் அடங்கிய சபை ஒன்றை அமைத்தல்.

இவையே புலிகளின் கோரிக்கைகளாகும். இவற்றில் எவற்றையேனும் அரசு பூரணமாக தட்டிக்கழிக்காது.

பூநகரி முகாமை ... [illegible] பாதையிலிருந்து ... கிலோமீற்றர் தள்ளி நிறுத்த அரசு தீர்மானித்துள்ளது.

கடல் வலயத் தடைச் சட்டத்தைத் தளர்த்துவதற்கும் புனரமைப்புப் பணிகளைக் கண்காணிக்கும் சபையில் புலிகளின் பிரதிநிதித்துவத்தை உள்ளடக்குவதற்கும் அரசுக்கு ஆட்சேபனை ஏதும் இல்லையாது.

அத்தியாவசிய பொருள்க

[6 ஆம் பக்கம் பார்க்க]

## சந்திரிகாவுக்கு பிரபா எழுதிய கடிதம் நேற்று லண்டனில் வெளியானது

லண்டன், மார்ச் 1

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே பிரபாகரன் ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்கு எழுதிய பிந்திய கடிதம் நேற்று லண்டனில் வெளியிடப்பட்டது

லண்டனில் உள்ள புலிகளின் சர்வதேச தலைமை அலுவலகம் இக்கடிதத்தை நேற்று வெளியிட்டதாக பி. பி. ஸி. அறிவித்தது.

இக்கடிதம் யாழ்ப்பாணப் பத்திரிகையில் நேற்று முன்தினம் வெளியானது தெரிந்ததே.

புலிகளுக்கும் — அரசுக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பமான பின்னர், இரு தரப்பினருக்கும் இடையில் பல்வேறு கடிதங்கள் பரிமாறப்பட்டன.

அவற்றில் ஒன்று ஒரு தரப்பினரால் உத்தியோக பூர்வமாக — சர்வதேச ரீதியில் — வெளியிடப்பட்டது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

"இக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்ட புலிகளின் கோரிக்கைகள் நியாயப்படுத்தக் கூடியவையா?"— என்று பி பி ஸியின் கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆனியிடம் கேட்கப்பட்டது.

★ பத்து முதல் பதினைந்து வரையான லொறிகளே பொருள்களுடன் வவுனியாவூடாக தினசரி வடக்கே செல்ல அனுமதிக்கப்படுகின்றன. இது போதுமானதல்ல

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று உண்ணாவிரதம் ஆரம்பிப்போர் விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

இன்று உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கும் யுத்தக் கைதிகள் விவரம் வருமாறு:-

★ பி. டி. திலகரத்ன — கேகாலை

★ உபாலி நிஸங்க — அம்பாறை

★ டபிள்யூ. ஏ. ஜீவரத்ன— திருமலை

★ நிமால் ரட்ணசிறி ஜெயவர்த்தன — திருமலை

★ டபிள்யூ. உப்புல் ஆனந்த சமன்திலக — கேகாலை

★ எம் டபிள்யூ. பிரியந்த — மாத்தறை

★ சுனில் திஸநாயக்க — அம்பாறை

★ நந்தன சமன்சிறி — அம்பாறை

சிசிர சாந்தலால் — கேகாலை

★ ஆர். எம். கருணரத்ன — பதுளை

★ ஏ. எம். குமார — அம்பாறை

★ எச். எம். கருணரத்ன குருநாகல்

★ எம். எம். கே. ராஜரத்ன — திருமலை

★ அனுர காந்த — அம்பாறை

★ டி. ஜி. தர்மவர்த்தன— அம்பாறை

இவர்கள் அனைவரும் பொலீஸாராவர். இவர்களுடன் காலியைச் சேர்ந்த டபிள்யூ. எல். உபாலி என்ற இராணுவச் சிப்பாயும் உண்ணாவிரதத்தில் குதிக்கின்றார்.

(உ-3)

## இராணுவத் தளபதி ஜெரி ஆனையிறவுக்கு விஜயம்

கொழும்பு, மார்ச் 1

இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா நேற்று முன்தினம் ஆனையிறவு முகாமுக்கு விஜயம் செய்தார் என்றும் —

ஆனையிறவுப் பகுதி வீதியில் அமைந்துள்ள தடைகள் குறித்து விடுதலைப் புலிகளுடன் தகவல் பரிமாறுவதற்காகவே அவர் அங்கு சென்றிருந்தார் என்றும் —

நேற்று ரூபவாஹினிச் செய்தியில் அறிவிக்கப்பட்டது.

வீதியில் இராணுவப் பக்கமாக உள்ள தடைகளை அப்புறப்படுத்திவிட்டு படையினர் முன்னே சென்றனர் என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத் தரப்பினரும்,

(2ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியை சந்திக்க முடியாத அமைச்சர்கள்!

கொழும்பு, மார்ச் 1

அரசின் அமைச்சர்களும் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட தங்கள் தேவைகளின் பொருட்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை சந்திக்க முடியாமல் இருப்பதாக சிங்கள வார இதழான "ஹிரு" தகவல் வெளியிட்டிருக்கிறது.

அமைச்சரவை அங்கத்தவர்களான இரு மூத்த அமைச்சர்கள் தவிர ஏனைய அமைசர்களுக்குக் கூட வாராந்தம் புதன்கிழமைகளில் நடைபெறும் அமைச்சரவைக் கூட்டம் தவிர வேறு எந்தச் சந்தர்ப்பங்களிலும் ஜனாதிபதியைச் சந்திக்க முடியாமல் இருக்கிறதாம்.

இதனால் ஜனாதிபதியின் செயலாளரின் பணிப்புரையின் கீழ் செயற்படவேண்டிய நிலையில் அமைச்சர்கள் இருப்ப

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் முடிவினால் யாழ்.மாவட்டத்தில் 300 பயிலுநர் வேலை இழக்கும் நிலை!

யாழ்ப்பாணம், மார்ச் 1

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் அரச சார்பு நிறுவனங்களில் பயிலுநர்களாகச் சேர்க்கப்பட்டுப் பணிபுரிவோரை பதவி நீக்கம் செய்வதென்ற அரசாங்கத்தின் முடிவினால் —

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 300 பேர் வரை பாதிக்கப்பட உள்ளனர்.

அரசின் முடிவு அடங்கிய பொது நிர்வாக அமைச்சின் 2/93(ii) ஆம் இலக்கச் சுற்றறிக்கை நேற்று யாழ்ப்பாணம் செயலகத்துக்கு வந்து சேர்ந்தது.

சுற்றறிக்கையால் யாழ். மாவட்டத்தில் 300க்கும் மேற்பட்ட பயிலுநர் பணியாளர்கள் பாதிக்கப்பட உள்ளது குறித்து யாழ். செயலக நிர்வாக உத்தியோகத்தர் திரு. எஸ். இராசதுரை பொது நிர்வாக அமைச்சு உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தெரிவித்தார்.

சுற்றறிக்கையை தப்பாது நடைமுறைப்படுத்துமாறு அந்த அதிகாரி தெரிவித்தார்.

பொது நிர்வாக அமைச்சின் குறிப்பிட்ட சுற்று நிருபத்தின் பிரகாரம் —

தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் அது போன்ற பயிற்சி நிறுவனங்களில் பாடநெறியின் ஒரு பகுதியாக செய்முறைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில் கல்வி வலயம் 3 ஆகும்

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ். மாவட்டத்தில் தற்சமயம் இயங்கும் இரு கல்வி வலயங்களையும் மேலும் வகுத்து மூன்று கல்வி வலயங்களாக்குவதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளது.

வட — கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் தற்காலிக செயலாளர் திரு. கே தியாகராஜா இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

வட — கிழக்கு மாகாணத்தில் உள்ள கல்விப் பணிப்பாளர்களுக்கான ... அவர் இத்தகவலை வெளி

(6 ஆம் பக்கம் பார்க்க)

JAFFNA COLLEGE CEYLON

யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டதாரிப் பிரிவு
(கொமெஷல் வங்கி அருகில்)
464, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

A/L 96 கணக்கியல்
ஆரம்பம்: 03 - 03 - 1995
வெள்ளி மாலை 3-00 மணி

விரிவுரை:
திரு. V. உருத்திரசிங்கம்
B. Com (Cey)

முக்கிய குறிப்பு.
மாணவர்கள் முன் கூட்டியே அனுமதிகளைப் பெற்று விரிவுரை நேரத்தில் ஏற்படும் சிரமங்களை தவிர்த்துக் கொள்ளவும்,
(ஜி-699)
இயக்குநர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும், வெளிச்சமும்

இணைந்து வழங்கும்

# கலை, இலக்கியக் கருத்தரங்கம் - 1995

இடம்: நல்லூர் இளங்கலைஞர் மன்றம்
காலம்: 1995 மார்ச் 03 வெள்ளி, 04 சனி, 05 ஞாயிறு ஆகிய மூன்று தினங்கள். தினமும் காலை 9-00மணி தொடக்கம் மாலை வரை.

03-03-1995 வெள்ளிக்கிழமை

★ தலைமை:
திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்கள்
★ தொடக்கவுரை:
திரு. க. ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் (பொறுப்பாளர், அரசியல்துறை, தமிழீழம்)
★ முதலுரை:
கலாநிதி நா. சுப்பிரமணியன் அவர்கள்

உரையாளர்கள்:
திரு. செம்பியன்செல்வன்
திரு குழந்தை ம. சண்முகலிங்கம்
திரு. மு. இராதாகிருஷ்ணன் (கோபாலி)
திருமதி கோகிலா மகேந்திரன்
திரு.இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன்
திரு. த. கலாமணி
திரு. தி. தயானந்தம் (தயா)

04-03-1995 சனிக்கிழமை

★ தலைமை:
வண்பிதா பிரான்சிஸ் ஜோசவ் அடிகள்
★ தொடக்கவுரை:
திரு. வே. பாலகுமாரன் அவர்கள் (தமிழீழ விடுதலைப் புலிகள்)
★ முதலுரை:
பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்

உரையாளர்கள்:
முல்லைமணி வே. சுப்பிரமணியம்
திரு. ஐ. சாந்தன்
திரு. க. சட்டநாதன்
கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை
திரு. பாலநடராஜன் (இளையவன்)
கவிஞர் இ. முருகையன்

05-03-1995 ஞாயிற்றுக்கிழமை

★ தலைமை:
திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்கள்
★ தொடக்கவுரை:
திரு. சு. ரவி அவர்கள் (பொறுப்பாளர், வெளியீட்டுப் பிரிவு, தமிழீழ விடுதலைப் புலிகள்)
★ முதலுரை:
பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள்

உரையாளர்கள்:
கலாநிதி சபா. ஜெயராசா
சங்கீத பூஷணம் சு. கணபதிப்பிள்ளை
திரு. நா. யோகேந்திரநாதன்
கவிஞர் விவேக்
பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர்

கவியரங்கு:
★ பங்குபற்றும் கவிஞர்கள்;
தில்லைச்சிவன்
இ. முருகையன்
ச. வே. பஞ்சாட்சரம்
காரை. செ. சுந்தரம்பிள்ளை
வீ. பரந்தாமன்
பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர்
சோ. பத்மநாதன்

கலை. இலக்கிய ஆர்வலர்களை அழைக்கின்றோம்

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகமும்
வெளிச்சமும்.

விளம்பர அன்பளிப்பு:
முத்தையா வெதுப்பகம்
கொழும்புத்துறை.

(சி-697)

---

யாழ். மாவட்ட
வெதுப்பக உரிமையாளர் சங்கம்

# பொது மக்களுக்கும் வியாபாரிகளுக்கும்

எமது சங்கத்திற்கு கச்சேரியினால் ஒதுக்கப்பட்ட மாவின் அளவீட்டில் அரைவாசியை வழங்க கச்சேரி அதிகாரிகள் முடிவு செய்ததனால் அம்மாவினைக் கொண்டு வெதுப்பி உற்பத்தி செய்தால் பொது மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது என்ற காரணத்தால் நாம் அதனைக் களஞ்சியத்திலிருந்து எடுப்பதற்கு பின்நின்றோம்.

எம் மீது சுமத்தப்படும் தேவையற்ற விமர்சனங்களைத் தவிர்ப்பதற்காகவும் தொடர்ந்து எமக்கு சீரான மாவின் விநியோகத்தை உறுதி செய்வதற்காகவும் நாம் எடுத்த முடிவானது முழுக்க முழுக்க பொது மக்களின் நன்மை கருதியே ஆகும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இதனால் பொது மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருத்தம் தெரிவிக்கின்றோம்.

மேற்குறிப்பிட்ட விளம்பரம் வெதுப்பக உரிமையாளர்களின் சார்பில் விடப்படுகின்றது.

வெதுப்பிக்கான வேறு பொருள்களைக் கட்டாயப்படுத்தி விற்கும் வியாபாரிகளுக்கு அந்தந்த வெதுப்பகத்தினாலான வெதுப்பி விநியோகம் தடைசெய்யப்படும்.

செயலாளர்,
யாழ் மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம்.

183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,

(சி-703)

---

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி நேசம்மா இம்மனுவேல்

(நானாட்டான்)

இளவாலைக் கன்னியர் மடம் மகாவித்தியாலய அதிபர் அருட்சகோதரி பொன வெஞ்சரின் தாயார். திருமதி நேசம்மா இம்மனுவேல் அவர்களின் மறைவு குறித்து அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இளவாலைக் கன்னியர்
மடம் ம.வி ஆசிரியர்
களும் மாணவர்களும்.

(35437)

---

ஆசிரிய மணி

## ஆர். ரி. சுப்பிரமணியம் ஜே. பி.

அவர்களின்

# ஆன்ம சாந்தி கிரியைகள்



மண்ணில்: 30 — 03 — 1917
விண்ணில்: 30 — 01 — 1995

எங்கள் குல தெய்வமே எம்மை விட்டு இவ்வளவு விரைவி பிரிந்து செல்வீர்கள் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. தங்களை விட்டுப் பிரிந்த நாம் நிமிஷம் தோறும் தங்களை எண்ணிய வண்ணமே இருக்கின்றோம்.

தங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குறிப்பு:

எங்கள் குடும்பத் தலைவர் ஆசிரிய மணி ஆர்.ரி. சுப்பிரமணியம் ஜே பி. அவர்களின் ஆத்மசாந்தி கிரியைகள் இன்று (01-03-95) புதன்கிழமை முற்பகல் 9மணியில் இருந்து சாவகச்சேரி வடக்கில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளன.

தொடர்ந்து ஆசிரிய மணி மலர் வெளியீடு இடம் பெறும்.

குறித்த வைபவத்தில் பங்குபற்றுவதுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உறவினர்களையும் நண்பர்களையும் வேண்டுகின்றோம்.

சு.குமாரமூர்த்தி [மகன்]
திருமதி வேதநாயகி நாகலிங்கம் [மகள்]
திருமதி கு.கமலகுமாரி [குமகள்]
டாக்டர் பொ. நாகலிங்கம் [மருமகன்]

பொற்பதி வீதி,
கொக்குவில்.
[illegible]
சாவகச்சேரி.

(3[illegible])

---

## மடுமாதா உற்சவம்

மன்னார், மார்ச்- 1

கடந்தவாரம் நடைபெற்ற மன்னார் மடுமாதா வருடாந்த உற்சவத்தின் போது சுமார் மூவாயிரம் பக்தர்கள் சமுகமளித்திருந்தனர்.

5 வருடகால இடைவெளிக்குப் பின் இம் முறைதான் தேவாலயத்தில் ஆராதனைகளும் உற்சவமும் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5-4)

## பாடசாலைகளில்

வல்வெட்டித்துறை மார்ச் 1

பருத்தித்துறை யாழ் வேலாயுதம் மகாவித்தியாலய நூற்றாண்டு விழாவின், விசேட இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் திரு. இ. ஞானசேகரம்பிள்ளை தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில், பருத்தித்துறை பிரதேச செயலரும், மேலதிக அரச அதிபருமான திரு. ஏ. சிவசுவாமி பிரதம விருந்தினராக கலந்து கொள்வார், (இ-5-155)

★ ★ ★

யாழ். சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய இல்லங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் அதிபர் திரு. எஸ். எஸ். தங்கராஜா தலைமையில் நடைபெறும். யாழ். கோட்டப் பணிமனை உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. அருளானந்தம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (க)

★ ★ ★

வல்வெட்டித்துறை, மார்ச் 1

பருத்தித்துறை சென் தோமஸ் றோ. க. பெண்கள் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கலட்டி றோ. க. பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி சி. ச. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இநநிகழ்வில் பருத்தித்துறை கல்விக்கோட்ட உதவி கல்விப் பணிப்பாளர் திரு. ஆ. இராஜேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-5-155)

★ ★ ★

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அதிபர் திரு. வி. மாணிக்கம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக (கிளிநொச்சி) விவசாய பீடத் துறைத் தலைவர் கலாநிதி அ. மோகனதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஓ)

★ ★ ★

யாழ். நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி பு. சின்னையா தலைமையில் நடைபெறவுள்ளன

இந்நிகழ்வில் யாழ்ப்பாண உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ அருளானந்தம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-5)

## சமஷ்டி குறித்து கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ். பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தினரின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பொருளியல் துறை மண்டபத்தில் — "இலங்கையில் சமஷ்டி பிரச்சினையும் உலகளாவிய அனுபவமும்" என்னும் தலைப்பில் திரு. மு திருநாவுக்கரசு கருத்துரை வழங்குவார். ஆர்வலர்கள் இதில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது. (ஓ)

## வானியல் செயலமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்ப்பாணம் நல்லூர் கல்விக் கோட்டங்களின் விஞ்ஞான ஆசிரியர்களுக்கான "வானியல்" செயலமர்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டது. (ஓ)

---

# அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு

## வணிக மாணவர் மன்றம்

யா/புனித கென்றியரசர் கல்லூரி
இளவாலை, மானிப்பாய்.

மன்ற நிதிக்காக 28 - 02 - 1995 அன்று இழுக்கப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் அதிர்ஷ்ட எண்கள்பின்வருமாறு:

| | |
|---|---|
| 1 ஆம் பரிசு | 2656 |
| 2 ஆம் பரிசு | 4938 |
| 3 ஆம் பரிசு | 486 |

ஆறுதல் பரிசுகள்
3411, 4433, 3091, 3226, 1088

மேற்படி பரிசுகளைப் பாடசாலை நேரத்தில் பாடசாலையில் 31-03-1995 இற்கு முன் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கின்றோம்.

நன்றி

[35436]

---

# விஞ்ஞான பீடம்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பாடவிதான அலகுகளுக்கான பரீட்சைகள் சித்திரை / வைகாசி 1995 அளவில் நடைபெறவுள்ளன. பரீட்சை விண்ணப்பப் பத்திரங்கள் 31 - 03 - 1995க்கு முன்னதாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

### 1. விஞ்ஞானத்தில் முதலாம் தேர்வு இரண்டாவது அரையாண்டு 1993/94

| | |
|---|---|
| தாவரவியல் | — BTG 11, BTG 12, BG 13 |
| இரசாயனவியல் | — CHG 11, CHG 12, CHG14, CG13 |
| விலங்கியல் | — ZOG 11, ZOG 12, ZG 11 |
| கணனி விஞ்ஞானம் | — CSG 13, CSG 14, |
| பௌதிகவியல் | — PHG 11, PHG 13, PG 13 |
| தூயகணிதம் | — MPG 12, MPG 13, PMG 11 |
| பிரயோக-கணிதம் | — MAG 12, MAG 13, AMG 12 |
| புள்ளிவிவரவியல் | — MSG 13, MSG 14, STG 12 |

### 2. விஞ்ஞானத்தில் இரண்டாம் தேர்வு முதலாவது அரையாண்டு 1993/94

| | |
|---|---|
| தாவரவியல் | — BTG 23, BTG 22, BG 23 |
| இரசாயனவியல் | — CHG 23, CG 27 |
| விலங்கியல் | — ZOG 21, ZOG 22, ZG 21 |
| கணனி - விஞ்ஞானம் | — CSG 22, CSG 24 |
| பௌதிகவியல் | — PHG 21. PG 24 |
| தூயகணிதம் | — MPG 22, PMG 21 |
| பிரயோக-கணிதம் | — MAG 22, AMG 24 |
| புள்ளிவிவரவியல் | — MSG 23, STG 21 |

### 3. விஞ்ஞானத்தில் மூன்றாம் தேர்வு முதலாவது அரையாண்டு 1993/94

| | |
|---|---|
| தாவரவியல் | — BTG 33, BTG 34, BG 32 |
| இரசாயனவியல் | — CHG 31. CHG 34, CG 35, CG34 |
| விலங்கியல் | — ZOG 31, ZOG 32, ZG 31 |
| கணனி- விஞ்ஞானம் | — CSG 31, CSG 32 |
| பௌதிகவியல் | — PHG 32, PG 33 |
| தூய கணிதம் | — MPG 31, MPG 34, PMG 32 |
| பிரயோக-கணிதம் | — MAG 32, AMG 32 |
| புள்ளிவிவரவியல் | — MSG 31, MSG 33, STG 31 |

1993/94 கல்வியாண்டில் விஞ்ஞானத்தில் முதலாம் தேர்வுக்கு மீள் பரீட்சார்த்திகளாகத் தோற்றவுள்ள மாணவர்கள் 1995 சித்திரை/ வைகாசி மாதத்தில் நடைபெறும் பரீட்சையிற் பொருத்தமான அலகுகளுக்குத் தோற்றும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மிகுதி அலகுகளுக்கான பரீட்சைகள் 1995 ஐப்பசி/ கார்த்திகை மாதத்தில் நடைபெறும். மேலதிக விவரங்களை விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

– பதிவாளர்.

(சி-698)

---

# 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 30 — 90 — 1941
இறப்பு: 14 — 02 — 1991

திருமதி

## புவனேஸ்வரி அரியராசா B. A

(ஆசிரியை, யா/ தாவடி இ. த. க. பாடசாலை)

குடும்ப ஒளி விளக்கே! தூண்டாத் திருவிளக்கே மாண்டீர்கள் என்பதை நம்பமனம் மறுக்கிறதே உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்

குடும்பத்தினர்

ஜெயந்தம்
தாவடி தெற்கு,
கொக்குவில்

(8359)

---

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 09 — 11 — 1942
மறைவு: 21 — 02 — 1993

## சதாசிவம் தேவராசா

(முருகன் ஸ்ரோஸ் பங்காளர் - யாழ்ப்பாணம்)

திதி: 01·03·1995

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எம்மை பண்போடும், அறிவோடும், பாசத்தோடும் வழிநடத்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் முருகா!

பிரிவால் துயருறும்;
தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

100, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(35441)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்குரிய தீர்வுக்கு மக்களின் நேரடி அங்கீகாரம் தேவை

## ஓய்வுபெற்ற விமானப்படைத் தளபதி கருத்து

கொழும்பு, மார்ச் 1

இலங்கையின் வேதனை ஒரு நெருக்கடியான கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

ஓய்வு பெற்ற விமானப் படைத் தளபதி எயர்வைஸ் மார்ஷல் ஏ. பி. சொய்ஸா முன்கண்டவாறு சண்டே லீடர் வார இதழுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சு வார்த்தை தொடர்பான பூர்வாங்க முயற்சிகள் ஊக்கமளிப்பவையாக இல்லை.

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக செய்து கொள்ளப்பட்ட உடன்பாடுகள் பின்னர் கிழித்தெறியப்பட்ட சரித்திரம் நமக்கு எச்சரிக்கையாக அமைய வேண்டும். கட்சி அரசியலே இதற்கு காரணமாகும்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான யோசனைகள் தமிழர்களினால் ஏற்றுக் கொள்ளப் படக் கூடியதாக இருப்பினும், முந்திய உடன்படிக்கைகளுக்கு ஏற்பட்ட கதி இதற்கும் ஏற்படாமலிருக்க வேண்டும் என்பதற்காக ஏதாவது உத்தரவாதம் ஒன்றை அவர்கள் பெறவிரும்புவார்கள் என்று கருத இடமுண்டு.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சர்வசன வாக்கெடுப்பு மூலம் மக்களின் நேரடி அங்கீகாரத்தைப் பெற அவர்கள் விரும்பக்கூடும்.

இனப்பிரச்சினைத் தீர்வு மக்களின் நேரடி அங்கீகாரத்துடன் வருமானால் அது உத்தரவாதப்படுத்தப்பட்டதாகவும் சர்வதேச ரீதியில் கவனத்தை ஈர்த்ததாகவும் இருக்கும்.

மறுபக்கத்தில் பேச்சு வார்த்தை தோல்வியுறும் சாத்தியத்தை எதிர்பார்க்க வேண்டும்.

பேச்சு தோல்வியுற்று மூன்றாவது ஈழம் யுத்தம் ஏற்படுவதையும் எதிர்பார்க்க வேண்டும். அப்படி ஒரு துக்ககரமான நிலை ஏற்படும்போது, ஆயுத விற்பனைத் தரகர்களும் கமிஷன் ஏஜெண்டுகளும் உலகின் பல பகுதிகளில் இருந்தும் கொழும்பில் குவியலாம். மரபுவழியற்ற யுத்தம் ஒன்றுக்கு பொருத்தமற்ற நவீன ஆயுதங்களை விற்பனை செய்வதற்கு அவர்கள் முன்வருவர்.

இம்முயற்சியில் அவர்கள் வெற்றிபெறவில்லையானால், ஆயுதப்படையினரின் அடிநிலை அதிகாரிகளை நிர்ப்பந்தித்து தங்களின் ஆயுதங்களை வாங்குவதற்கு தந்திரங்களை அவர்கள் மேற்கொள்வர்.

இப்படியான மோசடியான ஆயுதத் தரகர்கள் குறித்து படைகளில் உள்ள கனிஷ்ட அதிகாரிகள் எச்சரிக்கையா இருக்கவேண்டும்.

இவ்வாறு அவர் தனது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார். [இ-எ]

## உலகிலேயே உயர்ந்த சிவபெருமான் சிலை

### பெங்களூரில் திரை நீக்கம்

பெங்களூர், மார்ச் 1

மகாசிவராத்திரி தினமான நேற்று முன் தினம் உலகிலேயே உயரமான சிவபெருமான் சிலை ஒன்று பெங்களூரில் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இந்தச் சிலையின் உயரம் 65 அடி ஆகும்.

மகாசிவராத்திரி தினம் இந்தியா முழுவதும் பெரும் அளவில் அனுஷ்டிக்கப்பட்டது. காசியில் பக்தர்களின் கூட்டம் அலை மோதியது. அருள்மிகு காசிவிசுவநாதர் ஆலயத்தில் பால் குடம் ஏந்திய 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் அபிஷேகத்தில் கலந்து கொண்டனர்.

கங்கை, யமுனா மற்றும் சரஸ்வதி நதிகள் கலக்கும் அலஹபாத் சங்கமத்தில் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட இந்துக்கள் புனித நீராடினர். (இ)

## சாவகச்சேரி பிரிவுக்கு மருந்து வகைகள்

தென்மராட்சி, மார்ச் 1

குழந்தைகளுக்கான தடுப்பூசி மருந்து வகைகளும் ஏற்புத்தடை ஊசி மருந்து வகைகளும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த இரு மாதங்களாக தடுப்பூசி மருந்துகள் இல்லாமையால் சாவகச்சேரி பகுதி நோயாளர் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர். (இ-5-117)

## முன்னாள் அமைச்சர்கள்மீது முறைப்பாடுகள்

கொழும்பு, மார்ச் 1

ஐ. தே. க அரசில் பதவி வகித்த 15 அமைச்சர்களுக்கு எதிராக முறைப்பாடுகள் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அதிகாரிகள் சிலருக்கு எதிராகவும் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ-எ)

## பாகிஸ்தானில் கொலை பயமுறுத்தல்:

# கிறிஸ்தவர்கள் இருவரும் ஜேர்மனி சென்றனர்

கராச்சி, மார்ச் 1

பாகிஸ்தானில் தேவ நிந்தனைச் சட்டத்தின் கீழ் குற்றவாளிகளாகக் காணப்பட்டு பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட இரு கிறிஸ்தவர்களும் ஜேர்மனிக்குச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானின் அரசமைப்புக்கு ஏற்ப தேவ நிந்தனைச் சட்டத்தின் கீழ் இவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இதனை உலக நாடுகள் பல கண்டித்திருந்தன.

மேன்முறையீட்டு நீதிமன்ற விசாரணையின் பின்னர் இவர்கள் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் விடுதலை செய்யப்பட்டதற்கு இஸ்லாமிய அடிப்படைவாதிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

சம்பந்தப்பட்ட கிறிஸ்தவர்கள் இருவரையும் கொலை செய்யப்போவதாக இஸ்லாமிய அடிப்படைவாதிகள் பயமுறுத்தினர்.

இவர்களுக்கு அடைக்கலம் வழங்குவதற்கு நோர்வே அரசு முதலில் இணக்கம் தெரிவித்தது.

எனினும் இவர்கள் இருவரும் தற்போது ஜேர்மனிக்குப் புறப்பட்டுள்ளனர் என்று இந்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த இருவரில் ஒருவர் 14 வயதுச் சிறுவன் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் இந்த இருவரையும் பாதுகாக்குமாறு கோரி மனித உரிமை பாதுகாப்பாளர்கள் பாகிஸ்தான் நாடாளுமன்றத்துக்கு முன் ஆர்ப்பாட்டம் செய்தனர். [இ]

## புலிகளின் குரல் வானொலியில்

01 - 03 - 1995

**புதன் இரவு**

- ★ 8-01 — குயிலோசை— நிகழ்ச்சியில் ந. கிருஷ்ணா எழுதிய ''மட்டுநகர் கவிமணக்கும் நாடு''
- ★ 8-20 — ஏர்முனை— நிகழ்ச்சியில் ''சங்கமமாகிறது'' குறுநாடகம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — நாடகம் — சு. சிவராசா எழுதிய ''திருப்பம்'' என்பன இடம்பெறும்.

02 - 03 - 1995

**வியாழன் காலை**

- ★ 7-03 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — விடுதலை கீதங்கள்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி என்பன இடம்பெறும்.

## தமிழீழ வானொலி

ஒலிபரப்பு

**புதன் மாலை**

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — படப்பாடல்கள்
- ★ 5-30 — அறிவூற்று— சமூகக்கல்வி புவனேந்திரன், விஞ்ஞானம் ஈசன்
- ★ 6-00 — சிந்தனைக்கு சில வினாடிகள்
- ★ 6-02 — உங்கள் தெரிவு
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## வினாத்தாள் தயாரிப்போர் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 1

''வினாத்தாள் தயாரிப்போர்'' பதவிக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மார்ச்மாதம் 11ஆம் திகதியும், இலங்கை கல்வி நிர்வாக (மட்டுப்படுத்தப்பட்ட) சேவைக்கான பரீட்சை மார்ச் மாதம் 18 ஆம் திகதியும் கொழும்பில் நடைபெற உள்ளதாகவும்—

இப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் இதுவரை கிடைக்கப்பெறாதோர் கொழும்பு பரீட்சைத்திணைக்களத்தின், ஒழுங்கமைப்புக் கிளையில் நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம் என்றும்— பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார் என யாழ். வலயம் 1 இன் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## தொலைக்கல்வி ஆசிரியர் பரீட்சைக்கு விண்ணப்பம்

அச்சுவேலி, மார்ச் 1

தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தேசிய கல்வி நிறுவனத்தால் நடத்தப்படும் தொலைக் கல்வி ஆசிரியர் பயிற்சிநெறி இறுதிப் பரீட்சை பகுதி I பரீட்சை ஆகியவற்றுக்கு விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

உடனடியாக விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டியிருப்பதால் யாழ். மாவட்டத்தில் தொலைக் கல்வி ஆசிரியர் பயிற்சி நெறி நடைபெறும் நிலையங்களில் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

இறுதிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் பயிற்சி ஆசிரியர்கள் பகுதி I பரீட்சைக்கு விண்ணப்பித்த தொலைக் கல்வி நிலையத்திற்கு ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். [க-11]

## வலி. மேற்கு பிரதேச

# பாடசாலை அபிவிருத்திக்கு சுமார் 5 லட்சம் ஒதுக்கீடு

வலிகாமம்மேற்கு, மார்ச் 1

வலி மேற்கு பிரதேச செயலகத்தின் இந்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து பாடசாலை அபிவிருத்தி வேலைகளுக்கென 5 லட்சத்து 30 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது!

இத்திட்டத்தின் கீழ் வட்டு கார்த்திகேசு வித்தியாசாலை சுழிபுரம் கிழக்கு அ. மி. த. க பாடசாலை ஆகியவற்றில் சலகூடம் அமைப்பதற்கென தலா 30 ஆயிரம் ரூபாவும், வட்டு வடக்கு பிலவத்தை அ. மி. த. க. பாடசாலையில் மலகூடம் சலகூடம் என்பன அமைக்க 60 ஆயிரம் ரூபாவும், வட்டுக்கோட்டை திருஞான சம்பந்த வித்தியாசாலையில் மலகூடம் அமைக்க 30 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரிக்கு தட்டச்சு இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு 45 ஆயிரம் ரூபாவும்.

தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கென வட்டு இந்துக் கல்லூரிக்கு 80 ஆயிரம் ரூபாவும், சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலைக்கு 25 ஆயிரம் ரூபாவும், சித்தன்கேணி கணேச வித்தியாசாலைக்கு 50 ஆயிரம் ரூபாவும், சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்துக்கு 40 ஆயிரம் ரூபாவும்—

அராலி இந்துக் கல்லூரியில் வகுப்பறைக் கட்டடம்அமைப்பதற்கு 80 ஆயிரம் ரூபாவும், பாலராசிரியர் பயிற்சி நெறிக்கு 50 ஆயிரம் ரூபாவும்

சங்கானை அறநெறிப் பாடசாலை சிவப்பிரகாச வித்தியாசாலை ஆகியவற்றில் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கென 40 ஆயிரம் ரூபாவும், வட்டு. திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் கைப்பம்பிபொருத்துவதற்கு 10 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. [இ-14-175]

## வீடு, வீடாகச் சென்று உரிமம் வழங்கும் திட்டம்

### வெற்றிகரமாக செயற்படுகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ். மாநகரசபையினால் புதிதாக அமுல்படுத்தப்பட்டு வீடு வீடாகச் சென்று உரிமம் (லைசென்ஸ்) வழங்கும் திட்டம் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கு அமைய மாநகர ஊழியர்கள், வீடுகள் தோறும் சென்று சைக்கிள்கள் மற்றும் வளர்ப்பு நாய்களுக்கான 1995ஆம்ஆண்டு உரிமங்களை வழங்கி வருகிறார்கள்.

இதனால் மக்கள் மாநகர சபை அலுவலகத்திற்கு செல்லும் சிரமம் தவிர்க்கப்பட்டுள்ளதோடு.

இந்த ஆண்டு பெப்ரவரி மாத முதலாம் வாரம் வரை சுமார் 5 ஆயிரத்து 958 சைக்கிள் உரிமங்களும், நாய்களுக்கான 730 உரிமங்களும் மாநகரசபையினரால் வழங்கப்பட்டுள்ளன;

அதே சமயம் கடந்த 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் வாரம் வரையான காலப் பகுதியில் ஆயிரத்து 125 சைக்கிள் உரிமங்களும்13 நாய்களுக்கான உரிமங்களுமே வழங்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. [இ-5-4]

## பாதிக்கப்பட்டோர் விவரம் தென்மராட்சியில் திரட்டல்

யாழ்ப்பாணம், மார்ச் 1

1993 ஆம் ஆண்டின் பின் வன்செயல்களால் பாதிக்கப்பட்டு தென்மராட்சி பகுதிகளில் வசிக்கும் மக்களின் விவரங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் திரட்டி வருகிறது.

கிராம சேவகர் பிரிவு ரீதியாக கடந்த 26 ஆம் திகதி முதல் இப்பணி ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து அடுத்த மாதம் 17 ஆம் திகதி வரை விவரங்கள் திரட்டப்படும்.

குடமியன் பகுதி கிராம சேவகர் பிரிவில் இன்று செவ்வாய்க் கிழமையும் கொடிகாமம் தெற்கு கிராம சேவகர் பிரிவில் அடுத்த மாதம் முதல் திகதியும் —

நாவற்கட்டு பகுதியில் 2 ஆம் திகதியும், எழுதுமட்டுவாழ் வடக்கில் 3 ஆம் 4 ஆம் திகதிகளிலும் —

கரம்பக் குறிச்சியில் 7 ஆம் திகதியும், வரணி வடக்கில் 9 ஆம் திகதியும், மாசேரி பகுதியில் 10 ஆம் திகதியும் கொடிகாமம் மத்தி பகுதியில் 11 ஆம் திகதியும் —

மிருசுவில் தெற்கில் 16 ஆம் திகதியும், மிருசுவில் மேற்கில் 17 ஆம் திகதியும் விவரங்கள் திரட்டப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

# புற்றுநோயாளர் தங்க கொழும்பில் விடுதி

கொழும்பு, மார்ச் 1

மஹரகம புற்றுநோய் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் வடக்கு — கிழக்கு புற்று நோயாளர்களுக்கு தங்குமிட வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்காக வடக்கு — கிழக்கு புற்றுநோய் உதவி நிறுவனம் கொழும்பில் விரைவில் விடுதி ஒன்றை அமைக்கவிருக்கிறது.

இவ்வாறு வடக்கு - கிழக்கு புற்றுநோய் உதவி நிறுவனத்தின் தலைவர் டாக்டர் ஜே. நமசிவாயமும், அதன் செயலாளர் திரு. என். அரியரத்தினமும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் லண்டனில் நடைபெற்ற வைத்திய மாநாடொன்றில் யாழ். ஆஸ்பத்திரி வைத்தியர்களும் கலந்து கொண்டனர்; அவர்களுக்கு எமது நிறுவனத்தின் நோக்கங்கள், இலட்சியங்கள் என்பன பற்றி எடுத்துரைக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் இருந்து இங்கு வந்து எமது மாநாட்டில் கலந்து கொண்ட வைத்தியர்களும் கொழும்பில் அமைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள புற்றுநோயாளர் விடுதிக்கு தமது பூரண ஆதரவையும் வழங்குவதாகத் தெரிவித்துள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனம் இங்கிலாந்து போன்ற நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனமாக உள்ளதுடன், அங்கத்தவர்களும், நலன் விரும்பிகளும் இதன் வளர்ச்சிக்கு நிதியுதவிகளை வழங்கியும் வருகின்றனர். [இ-5-4]

## வலி. மேற்கு செயலகத்தின் 2 ஆவது நடமாடும் சேவை

அராலி, மார்ச் 1

வலி. மேற்கு பிரதேச செயலகத்தின் இரண்டாவது நடமாடும் செயலக சேவை வட்டு. வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு மக்களுக்காக பிளவத்தை அ. மி. த. க பாடசாலை மண்டபத்தில் கடந்த 5 ஆம் திகதி பிரதேச செயலாளர் திரு. கா. சந்திரராசா தலைமையில் நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவையின் போது கமநல சேவை நிலையத்தால் 300 தென்னம் பிள்ளைகளும் மரக்கறி விதைகளும் விற்பனை செய்யப்பட்டன; பிரதேச சபையால் 35 பேருக்குக் குறைந்த சிறார்களுக்கு ஜீவாகாரம் இலவசமாக வழங்கப்பட்டது; இலவச ஆயுள்வேத வைத்தியசாலை 46 நோயாளருக்கு சிகிச்சை வழங்கியது.

அத்துடன் இப் பிரிவிலுள்ள சகல சிறு வீதிகளும் துப்புரவு செய்யப்பட்டன. கட்டாக்காலிகளாகத் திரிந்த 25 க்கு மேற்பட்ட நாய்கள் பிடித்து அழிக்கப்பட்டன.

பொதுமக்களால் வழங்கப்பட்ட முறைப்பாடுகளை பிரதேச சபை செயலாளர் திரு. க. திரவியம் நேரடியாகப் பெற்று ஆராய்ந்தார். சிலர் ஆதனவரியையும் சைக்கிள் வரியையும் செலுத்தினார்கள்.

கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தினர் இச் சேவையின் போது இடம்பெயர்ந்து வந்து முகாம்களில் தங்கியுள்ள 10 ஏழைக் குடும்பங்களுக்கு பிளாஸ்ரிக் பாவனைப் பொருட்களை வழங்கினார்கள். [க 12]

## சமய அறிவு போட்டிகள்

வலிகாமம் தெற்கு மார்ச் 1

தெல்லிப்பளை துர்க்காபுரம் இந்து இளைஞர் சங்கம்—

தெல்லிப்பளை, உடுவில், சண்டிலிப்பாய் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் மட்டும் பங்குபற்றும் 1994 ஆம் ஆண்டுக்கான சமய அறிவுப் போட்டியொன்றை எதிர்வரும் 3 ஆம் திகதி நடத்த உள்ளது. (இ-5-152)

## எத்தனையோ விட்டுக் கொடுப்புக்களுடன்

# சமாதான கதவுகள் திறந்துள்ளபோது சந்திரிகா ஏன் இழுத்தடிக்க வேண்டும்

## நூல் வெளியீட்டு விழாவில் இளம்பரிதி கேள்வி

யாழ்ப்பாணம், மார்ச் 1

எமது தலைவர் எத்தனையோ விட்டுக் கொடுப்புகளுடன் சமாதானத்துக்கான கதவுகளைத் திறந்து வைத்துள்ள நிலையில் சந்திரிகா ஏன் இழுத்தடிக்க வேண்டும்?

இவ்வாறு யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு. இளம்பரிதி கேள்வி எழுப்பினார்.

நாவலர் கலாசார மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மீசாலையூர் கமலாவின் 'விடியலின் கீதம்' கவிதை நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:—

போராட்டத்துக்கு முகம் கொடுக்க இயலாமல் புலம்பெயர்ந்த தமிழர்கள் கூட இன்று மனம் மாறி நிற்கின்றார்கள். எமது தேசத்தின் மறுமலர்ச்சியை திட்டியவர்கள் கூட இன்று எமது தேசம் விரைவாக விடிய வேண்டும் என்று கூறுகிறார்கள்.

சிங்கள மக்களும் கூட எங்கள் உரிமைகளின் உண்மையான நிலைகளைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் இன்று சிங்கள மக்கள் மனம் மாறி நிற்கிறார்கள்; தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணப்பட வேண்டும் என்கிறார்கள்.

கடந்த சில நாட்களாக பேச்சு வார்த்தைகள், கடிதப் பரிமாற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். முதலாம் கட்டப் பேச்சின் போது வடக்கு - கிழக்கு புனரமைப்பு என்றவர்கள் படிப்படியாக இறங்கி இன்று தனியே யாழ். மாநகர சபைப் புனரமைப்பு பற்றி கடிதம் எழுதியுள்ளார்கள்.

சந்திரிகா வந்த பாதையை விட்டு விலகிப் போகிறார் போல் தெரிகிறது. அரசியல் தீர்வு காண்பேன் என்று கூறி ஆட்சிக்கு வந்த அவர் இன்று பாதை மாறிப் போகிறார். இவர் எங்கே போகின்றார்.

நாங்கள் சமாதானத்தை நோக்கியே நிற்கிறோம். நிரந்தர சமாதானம் ஏற்படுவதோடு தமிழ் மக்களின் அபிலாசைகள் பூரணப் படுத்தப்பட வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில்தான் தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்றார்.

மிகப்பெரிய நெருக்கடிகள், தடைகள் மத்தியில் தான் சாதனைகள் பிறக்க முடியும் அதுபோலவே பெரிய தடைகள் நெருக்கடிகள் மத்தியில் வழங்கப்படும் ஆக்கங்கள் தான் உண்மையானவையாக— தரமானவையாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

திரு. செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஆசியுரையை ஆத்மஜோதி நா. முத்தையா வழங்கினார். திருமதிசரோஜா சிவச்சந்திரன் நூலை வெளியிட்டு வைக்க முதற் பிரதியை சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் திரு ம. அருணாசலம் பெற்றுக் கொண்டார். திருமதி ஆதிலட்சுமி சிவகுமார் மதிப்பீட்டுரை வழங்கினார். (ஓ-14)

## கைப்பம்ப் அன்பளிப்பு

வட்டுக்கோட்டை., மார்ச் 1

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினர் அராலி மேற்கு ராஜன் கதிர்காமர் பொதுப் பணி, விளையாட்டுக்கழகத்தினரின் வேண்டுகோளை ஏற்று அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலையில் வளர்ச்சி குன்றிய கிராமச் சிறுவர்களின் குடிதண்ணீர் தேவையைப்பூர்த்தி செய்யும் நோக்குடன் ஒரு கைப்பம்பினை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

# ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது

## தமிழர் விழிப்புடன் இருக்க வேண்டும் என்கிறார் நீலன்

யாழ்ப்பாணம், மார்ச் 1

ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றைக் காண முடியாது — என்று கலாநிதி நீலன் திருச்செல்வம் தெரிவித்தார்.

இராமகிருஷ்ண மிஷன் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற தமிழ் மாறன் 'கட்டுரைகள்' நூல் வெளியீட்டு விழாவில் பேசிய திரு. நீலன் திருச்செல்வம் தொடர்ந்து கூறியதாவது:-

ஒற்றை ஆட்சியின் கீழ், அதிகாரப் பரவலாக்கல் என்ற போர்வையில் ஏற்படுத்தப்பட்ட, மாகாண சபை ஆட்சி முறையின் தோல்வி, தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஒரு நல்ல பாடமாக அமைந்துள்ளது. எனவே மாற்றியமைக்கப்படவுள்ள அரசமைப்பானது, ஒற்றையாட்சி முறையின் கீழானதாக அமைய முடியாது. இதுவிடயத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் மிகவும் கவனமாகச் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

1972 ஆம் 1978ஆம் ஆண்டுகளில புதிய அரசமைப்பு திட்டங்கள் வரையப்பட்ட போது இக்குழுவில் தமிழ் மக்கள் இடம்பெறவில்லை. இவர்கள் பங்காளிகளாகவும் இருக்கவில்லை.

ஆனால் தற்போதைய அரசமைப்புமாற்றம் தொடர்பான குழுவில் தமிழர்கள் பலரும் இடம்பெற்றுள்ளனர். அரசமைப்பில் மாற்றத்தை உருவாக்குவதில் அவர்கள் பங்காளிகளாகவும் உள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தை தமிழ் முஸ்லிம் மக்கள் சரிவரபயன்படுத்திக்கொள்ள வெண்டும்.

அரசமைப்பை மாற்றுவதில் நான்கு விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும்.

தனிமனித உரிமை பொருளாதார உரிமை, சமூக உரிமை குழு உரிமை ஆகியனவே அவை அவற்றையும் பாதுகாத்துக்கொள்ள இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளவேண்டும்

அத்துடன் தேசிய இனங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மேற்கொண்டுள்ள பிரகடனத்தை புதிய அரசமைப்பில் இணைக்கும் வழிவகைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

புதிய அரசமைப்பில் எத்தகைய பிரதிநிதித்துவ முறை இடம்பெறவேண்டும் என்பது குறித்தும் நாம் ஆழ்ந்து சிந்தித்து செயற்பட வேண்டும்.

இதேபோல் மொழிக்கொள்கை, அதன் நடைமுறை குறித்தும் ஏற்புடைய விடயங்களை அரசியலமைப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டும் — என்றும் திரு நீலன் குறிப்பிட்டார். (அ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தேவை

சிறந்த அனுபவமுடைய பில் கிளாக் உடன் தேவை. பலசரக்கு வியாபாரத்தில் சிறந்த அனுபவமுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். முகாமையாளர்: இல. 180, அருச்சுனாசாலை [ஸ்ரான்லி வீதி], யாழ்ப்பாணம். [35432]

### விற்பனைக்கு

45நாட்கள் நிரம்பிய பொமரேனியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. (மூன்று பெண் ஒரு ஆண்) தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: "ரவான் வளவு", இந்துக் கல்லூரி வீதி, சித்தன்கேணி. [35430]

### விற்பனையாகிறது

கும்பகர்ணன் வதைப்படலம் யாழ். பல்கலைக்கழகத்தின் வெளிவாரி முதற்கலைத் தேர்வு G. A Q பாலபண்டித மாணவர்களுக்கு ஒரு பாடநூல் எல்லாப் புத்தகசாலையிலும் கிடைக்கும். மகிமலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம், ஸ்ரீகாந்த் புத்தகசாலை, நல்லூர். (சி-384)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Christombu Golden Comet சிவப்பு பேடடுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், இல 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர் [35411]

### மாணவர்களின் கவனத்துக்கு

விற்பனையாகின்றது: புதிய செயல் நூல் தமிழ் மொழி ஆண்டு 1, ஆண்டு 2 1994ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்துள்ள முதல் மொழி - தமிழ் - பாடத்திட்டத்தின் ஆறுவிடயப் பரப்புகளும் இடம்பெற்றுள்ளன. கேட்டல் — கிரகித்தல், பார்வைப் பிரித்தறிகை, உளவியக்கச் செயற்பாடுகள், பேச்சு மூலம் வெளிப்பாடு, வாசிப்பு, எழுத்து. வெளியீடு: கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். (8355)

விற்பனையாகின்றது: புதிய பாடநூல் நாமும் சுற்றாடலும் ஆண்டு 2 விளக்கப்படங்களுடன் கூடியது 1994ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்துள்ள தேசியக் கல்வி நிறுவகம் ஆரம்பக் கல்வித்துறை ஆண்டு 2க்கு ஆன விரிவான பாடத்திட்டம் முழுவதையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. வெளியீடு: கு. வி அச்சகம், யாழ்ப்பாணம். (8354)

### மணமகள் தேவை

கனடாவில் நிரந்தர வதிவுரிமையுடைய 8இல் செவ்வாயுடைய 36 வயது மணமகனுக்கும், உதயத்தில் செவ்வாயுடைய 33 வயது மணமகளுக்கும் பட்டதாரி மணமக்கள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. கனடாவுக்கு ஸ்பொன்சர் செய்யலாம். முழுவிவரங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல 763, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [35355]

### இலங்கை மணமகள் தேவை

32 வயது, அனுஷம், செவ்வாய் 4 Aircraft Engineering Diploma Technician வேலை புரிந்தவருக்கு மணப்பெண் தேவை. அவுஸ்திரேலியா வேறு நாடுகளிலிருந்து Sponsering விரும்புகிறார் து விமலா, யாழ்/ நாச்சிமார் கோயிலடி. (35425)

## ராமகிருஷ்ணரின் 160ஆவது ஆண்டு பிறந்தின விழா

யாழ்ப்பாணம், மார்ச் 1

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின 160ஆவது பிறந்ததின திதி பூஜையும், தரித்திர நாராயண சேவையும் பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்திலும், திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்திலும் எதிர்வரும் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

இரு இடங்களிலும் நடைபெறும் இந்நிகழ்வுகளில் மங்கள ஆரத்தி விசேட பூசைகள் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம் பெறும். [9-5]

# சிறந்த ஆசிரியர்களுக்கே ஆலோசகர் நியமனங்கள்

கொழும்பு, மார்ச் 1

பாடசாலைகளில் சிறந்த சேவை ஆற்றியுள்ள தகுதியானவர்களுக்கு இனிமேல் "ஆசிரிய ஆலோசகர் நியமனங்கள்" வழங்கப்படவுள்ளதாக கல்வி, உயர் கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன தெரிவித்துள்ளார்.

இதன்படி தகுதி, அனுபவம் என்பவற்றின் அடிப்படையிலும், ஒழுங்காக வேலை செய்பவர்களுக்குமே எதிர்காலத்தில் பதவி உயர்வுகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தெல்லிப்பழை

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையுள்ளது)

## கிளைக் குழுத் தேர்தல்

1. தேர்தல் நடைபெறும் திகதி: **11 - 03 - 1995** சனிக்கிழமை.
   நேரம்: முற்பகல் **9-00** மணி தொடக்கம் பிற்பகல் **4-00** மணிவரை நடைபெறும்.
2. இடம் - வாக்களிப்பு நிலையம்: யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், உடுவில் வீதி, மானிப்பாய்
3. தேர்தல் நடைபெறவுள்ள கிளைகளின் விவரம்

| கிளை இலக்கம் | கிளையின் பெயர் |
|---|---|
| 01 | தெல்லிப்பழை |
| 14 | கொல்லங்கலட்டி |
| 26 | மயிலிட்டி வடக்கு |
| 29 | வீமன்காமம் |

4. குறிப்பு
   28-05-1994 இல் நடைபெற இருந்த மேற்படி நான்கு கிளைகளுக்குமான கிளைக்குழுத் தேர்தல்கள் எனது 26 05-1994 ஆம் திகதிய பத்திரிகை அறிவித்தலின் பிரகாரம் ஒத்திவைக்கப்பட்டிருந்தன. இக் கிளைகளுக்கான கிளைக்குழுத் தேர்தல்களே தற்பொழுது நடைபெற உள்ளன. அத்துடன் 10-02-1995, 11-02-1995 ஆகிய திகதிகளில் மேற்படி கிளைகளின் உறுப்புரிமை விண்ணப்பப்பத்திரங்களில் பரிசீலனையின் போது ஏற்றுக் கொள்ளப்பட்ட அங்கத்தவர்களுடைய பெயர்களும் வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. மேற்படி வாக்காளர் பட்டியல்கள் ஏற்கனவே காட்சிப்படுத்தப்பட்டுள்ள பின்வரும் கிளைகளிலும் சங்கத் தலைமைக் காரியாலயத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றேன்.

| கிளை இலக்கம் | பெயர் | காட்சிப்படுத்தப்படும் இடம் |
|---|---|---|
| 01. | தெல்லிப்பழை | கி இ.11 கந்தரோடை நிவா. கிளை; கி இ 02 துர்க்கைஅம்மன் கோயிலடி நு கிளை. |
| 14. | கொல்லங்கலட்டி | கி இ 04 சித்தன்கேணி நிவா கிளை |
| 26. | மயிலிட்டி வடக்கு | கி.இ.15 தாவடி நிவா. கிளை. |
| 29. | வீமன்காமம் | கி இ.12 உடுவில் ஆலடி நிவா. கிளை; கி இ.17 நீர்வேலி நிவா. கிளை. |

எ. சின்னத்தம்பி
தேர்தல் உத்தியோகத்தர்

பிரதேச செயலகம்.
வலிகாமம் வடக்கு.
தெல்லிப் பழை.
25-02-1995

[சி/686]

தெல்லிப்பழை

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

( வரையுள்ளது )

## கிளைக்குழு உத்தியோகத்தர்கள் தெரிவும் பொதுச்சபைப் பிரதிநிதிகள் தெரிவும்

மேற்படி பின்வரும் கிளைகளுக்கான உத்தியோகத்தர்கள் தெரிவும், பொதுச் சபைப் பிரதிநிதிகள் தெரிவும் கீழ் காட்டப்பட்டுள்ள திகதிகளில் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள சங்கத் தலைமையகத்தில் நடைபெறவுள்ளன.

குறிப்பிட்ட கிளைகளுக்கு 1994-05-21ஆம் திகதி யன்று தெரிவாகிய நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவரையும் குறித்த திகதியில் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கால , நேரம் தொடர்பான மேலதிக விவரங்கள் கிளை நிலையங்களில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பு:

இதற்கான கூட்ட அறிவித்தல், அழைப்புக்கள் கிளைக்குழு உறுப்பினர்களுக்கு தனித் தனியாக தபால் மூலம் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

| திகதி | கிழமை | கிளை இலக்கம் |
|---|---|---|
| 03-03 1995 | வெள்ளி | 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 |
| 04-03-1995 | சனி | 11, 12, 13, 15, 16, 17, 19, 20 |
| 05-03-1995 | ஞாயிறு | 21, 22, 23, 24, 25, 27, 28, 30, 31 |
| 10-03-1995 | வெள்ளி | 32, 33, 34 |
| 12 03-1995 | ஞாயிறு | 35, 36, 37, 38, 40, 41, 42, 43, 44 |

இங்ஙனம்,
தங்கள் கூட்டுறவுச் சேவையிலுள்ள,
ஐ சிங்கராசா,
செயலாளர்.

நா. தவநாதன்,
தலைவர்,
மானிப்பாய்.
1995-02-25.

# பணிநிலை வெற்றிடங்கள்

கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியுடையவர்களிடமிருந்து **11-03-1995** வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.
(சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் இருத்தல் வேண்டும் ]

### 1) சத்திர சிகிச்சைத் தாதி (THEATRE NURSE)

தகைமை: சத்திர சிகிச்சைக் கூடத்தில் குறைந்தது இரண்டு ஆண்டுகள் முன் அனுபவம்.

### 2) மருந்தாளர் (PHARMACIST)

தகைமை: மருந்தாளர் தகைமைச் சான்றிதழ் உள்ளவர்கள் அல்லது மருத்துவ மனையில் அல்லது மருந்தகத்தில் குறைந்தது இரண்டு ஆண்டுகள் கடமையாற்றிய முன் அனுபவம் வேண்டும்.

### 3) ஆண் பரிசாரகர் (MALE ATTENDENT)

தகைமை: க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தி.
வயது: **28** வயதிற்கு உட்பட்டவர்.

★ விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பணிநிலை வெற்றிடம்" எனக் குறிப்பிடல் வேண்டும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

நிர்வாகி,
**வில்லியம் ஹாவே தனியார் மருத்துவமனை**
17, கண்டி வீதி. சுண்டுக்குழி,
யாழ்ப்பாணம்.

[சி-695]

## பொது மக்களுக்கு ஒரு பகிரங்க அறிவித்தல்

உதயன் பத்திரிகையில் 23 - 02 - 1995 ஆம் திகதி தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயில் பற்றி வந்த அறிவித்தல் தொடர்பாக தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில் தரும பரிபாலன சபையால் விடுவிக்கப்படும் பகிரங்க அறிவித்தல் ஆவது:-

தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயில் முன்னூறு வருடங்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டு அன்றிலிருந்து ஆசார சீலரான சாதாரண பொது மக்களாலேயே தொடர்ந்து 216 வருடங்களாகப் பூசை செய்யப்பட்டு வந்தது இதன்படி கடைசியாக 1911 ஆம் ஆண்டு வரை காலஞ்சென்ற திரு. சின்னையா என்பவர் பூசை செய்து 1911 ஆம் ஆண்டில் முதன் முதலாக அர்ச்சகரான ஐயாமுத்து ஐயர் என்பவர் அர்ச்சகராக நியமிக்கப்பட்டார். 1912 ஆம் ஆண்டின் இறுதியில் திரு. குமாரசாமி ஐயர் அர்ச்சகராக நியமிக்கப்பட்டு 1945 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வயோதிபம் காரணமாகப் பதவி விலகிக் கொண்டார். குமாரசாமி ஐயருக்கு ஆண் வாரிசுகள் எவருமே இருக்கவில்லை 1945 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் திரு. முத்துச்சாமிக் குருக்கள் சபையால் அர்ச்சகராக நியமிக்கப்பட்டார் 1963 ஆம் ஆண்டில் திரு முத்துச்சாமிக் குருக்கள் சபையால் பதவி நீக்கம் செய்யப்பட்டு அதே ஆண்டு திரு க. தியாகராஜக் குருக்கள் அர்ச்சகராக நியமிக்கப்பட்டார். 1983 ஆம் ஆண்டு வைகாசி மாதம் திரு. க தியாகராஜக்குருக்கள் சபையால் பதவி நீக்கஞ் செய்யப்பட்டார். 1983 ஆம் ஆண்டு ஆனி மாதம் திரு. தி. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் மேற்படி கோயிலின் அர்ச்சகராக சபையால் நியமிக்கப்பட்டார். 03-09-1988 இல் திரு. தி சோமஸ்கந்தராஜாக் குருக்கள் அர்ச்சகர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்து கோயில் திறப்புகளை சபையின் செயலாளரிடம் ஒப்படைத்தார். 03 - 09 - 1988 இலிருந்து இரண்டு மாதங்களுக்கு தற்காலிக அர்ச்சகர் பூசை செய்து வந்தார். 18 - 11 - 1988 இல் திரு தி சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அர்ச்சகராக சபையால் மீண்டும் நியமிக்கப்பட்டு கோயில் திறப்புகள் அவரிடம் கொடுக்கப்பட்டன 18 - 11 - 1988 முதல் சபையால் அர்ச்சகராக நியமிக்கப்பட்ட திரு. தி. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அரசினர் ஆசிரியர் பதவியைப் பெற்றுக் கொண்டமையால் 1995 ஆம் ஆண்டு மாசி மாதம் 28 ஆம் திகதியுடன் சபையால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்

இந்தக் கோயிலின் அர்ச்சகர்கள் சபையால் நியமிக்கப்பட்டு, மாதாந்த ஊதியம் கொடுக்கப்பட்டு சபையாலே வேலை நீக்கம் செய்யப்பட்டு வந்துள்ளார்கள் 1945 ஆம் ஆண்டின் பிறகு இந்தக் கோயிலுக்கு நியமிக்கப்பட்ட அர்ச்சகர்கள் எல்லோருமே காலத்துக்குக் காலம் நியாயமான காரணத்தின் அடிப்படையில் சபையால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள் இந்தக் கோயிலில் எவருக்குமே பரம்பரைப் பூசை உரித்துக் கிடையாது. எல்லா அர்ச்சகர்களுமே வேதன அடிப்படையிலேயே சேவையாற்றியுள்ளார்கள்.

கோயில் நிர்வாகம் யாவும் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து இயங்கி வரும் தரும பரிபாலன சபையால், அதன் பிரமாணங்களுக்கு அமைய சிறப்பாகவும் ஒழுங்காகவும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கோயிலின் நிலம் கூட சபையின் பேரில் உறுதி முடிக்கப்பட்டு, தனி ஒருவருக்குச் சொந்தமாக இல்லாமல் சபையின் பரிபாலனத்தில் பொதுவான கோவிலாகவே உள்ளது. மேற்படி சபையின் கீழ் இயங்கி வரும்

(I) தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயில்
(II) தும்பளை முருகன் கோயில்
(III) தும்பளை முத்துமாரி அம்மன் கோயில்

ஆகிய மூன்று கோயில்களும் இன்று வரை சபையின் நிர்வாகத்திலும், பராமரிப்பிலும் பொதுக் கோயில்களாக விளங்குகின்றன. இங்கே பூசை உரித்தோ, நிலமோ அல்லது வேறு எதுவுமோ எவருக்கும் பரம்பரை உரித்தாகவோ தனிப்பட்ட உரித்தாகவோ இல்லையென்பதை இத்தால் வெளிப்படுத்துகின்றோம்.

தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில்
தரும பரிபாலன சபை

(35433)

யாழ். பல்கலைக்கழகம்
இலங்கை

## மரத்தளபாட விநியோகத்திற்கான கேள்விப்பத்திர அறிவித்தல்

யாழ். பல்கலைக்கழகத்திற்கு கீழ்க்குறிப்பிட்ட மரத்தளபாடப் பொருள்களை வழங்குவதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 01. | விரிவுரை மண்டப கதிரைகள் (Lecture Hall Chairs) | — 75 |
| 02. | விரிவுரை மண்டப மேசைகள் 1200 மி மீ. 600 மி. மீ. (Table for Lecture room) | — 12 |
| 03. | நிர்வாக உத்தியோகத்தர் மேசை (Executive Table) | — 19 |
| 04. | கண்ணாடி முகப்பிலான அலுமாரிகள் (Glass fronted Almyrah) | — 16 |
| 05. | ஒரு லாச்சியுடன் கூடிய மேசை (Table with 1 Drawer) | — 04 |
| 06. | மாநாட்டு மேசை (Conference Table 10' X 4') | — 01 |
| 07. | மாநாட்டு மேசைக் கதிரைகள் (Conference Table Charis) | — 10 |
| 08. | கையுடன் கூடிய பின்னல் கதிரை (Rattened arm Chair) | — 73 |
| 09. | தட்டெழுத்தாளர் முக்காலி (Typist Stool) | — 08 |
| 10. | பக்க ராக்கை (Side Rack) | — 08 |
| 11. | மரவாங்குகள் (Wooden Benches) | — 02 |
| 12. | திறப்புகளுக்கான கபினெற் (Key Cabinet | — 01 |
| 13. | காரியாலய மேசை 4½' X 2½' (Office Table) | — 05 |
| 14. | புறாக்கூட்டைபொத்த ராக்கை (Pigeon Hole Rack) | — 02 |
| 15. | நேர் நாற்காலி (St Back Chair) | — 14 |
| 16. | பரிசோதனைக் கூட முக்காலி (Laboratory Chairs) | — 05 |
| 17. | விரிவுரை மண்டப கதிரைகளுக்கான கைத்தாங்கல்கள் (Hand rest for Lecture Hall Chairs) | — 50 |

மேற்படி தளபாடங்களுக்கான வரைபடங்களையும், ஏனைய விவரங்களையும் 07 - 03 - 1995 க்கும் 09 - 03 - 1995 க்கும் இடையில் அலுவலக நேரத்தில் யாழ். பல்கலைக்கழக நிதியாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

இவற்றைப்பெற விரும்புவோர் மீளளிக்கத்தகாத வைப்புப் பணமாக ரூபா 250/-ம் மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூபா 5,000/-ம் பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 17 - 03 - 1995 காலை 10-00 மணிக்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அடங்கிய தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் "மரத் தளபாடங்கள் வழங்கலுக்கான கேள்விப்பத்திர விண்ணப்பம்" என தெளிவாகக் குறிப்பிடப்பட்டு நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என முகவரியிடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அன்றைய தினம் காலை 10-30 மணிக்கு திறக்கப்படும்.

– பதிவாளர்.

[சி 687]

## 31-ம் நாள் நினைவஞ்சலி

ஆசிரியமணி

**R. T. சுப்பிரமணியம்**

எமது சங்கத்தின் முன்னாள் தலைவரும், சமூக சேவையாளரும் முன்னேற்றப் பேச்சாளரும் பத்திரிகை நிருபரும் ஆகிய மேற்படி பெரியார் சிவபதமடைந்ததை நினைந்து எமது சங்கம் அஞ்சலியையும் குடும்பத்தினர்க்கு அனுதாபத்தையும் வழங்குகின்றோம்.

நல்லூர் ஓய்வூதியர் நலன்புரிச் சங்கம்.
திருநெல்வேலி.

[8356]

## 31-ம் நாள் நினைவஞ்சலி

**அமரர் சோமசுந்தரம் சிவரத்தினம்**
(U. R.)
(இளைப்பாறிய சிமெந்துக் கூட்டுத்தாபன கல்லுடைக்கும் இயந்திர இயக்குனர், மாவிட்டபுரம்)

மலர்வு: **10—07—1924** உதிர்வு: **29—01—1995**

அன்பின் சிகரமே பண்பின் இருப்பிடமே
இல்லத்தின் ஒளிவிளக்கே இதயத்தின் தெய்வமே
உற்றார்க்கு உறைவிடமே ஊரார்க்கு நண்பனே
காலன் அவன் கவர்ந்து நாள் 31 கழிந்ததப்பா
கனவு போல் நீர் கனடாவில் மறைந்தீரோ
உங்கள் நினைவோ இன்னும் எம்மை வாட்டுதப்பா!

தங்கள் ஆன்மா சாந்தியடைய இதயம் நெகிழ்ந்து, இறைவனை இறைஞ்சுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவில் வாடும்;
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

சேணியடி,
கொக்குவில்.

(35435)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## அரசின் உள் நோக்கம்

இப்போது நடைமுறையில் உள்ள மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா அரசின் கடற்படையை விஸ்தரிக்க ஏற்பாடுகள் செய்யப்படுவதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. கடற்படைத் தளபதி மொஹான் சமரசேகரா இது விடயத்தில் விசேட அக்கறை காட்டுகிறாராம்.

கடற்படையினரின் மனோ பலத்தை மீண்டும் கட்டி எழுப்புவதற்காக, அவர்களுக்கு உசார் கொடுப்பதற்காக போர்க்கப்பல் ஒன்று கடற்பயிற்சியிலும் ஈடுபட்டிருக்கிறது.

கடற்படையை மட்டுமன்றி மோதல் தவிர்ப்பைச் சாதகமாக்கிக் கொண்டு, இராணுவத்தினையும் அரசு பலப்படுத்தி வருகிறது. இராணுவத் தளபதி ஜெரி சில்வாவும் இது விடயத்தில் தீவிர கவனம் எடுத்து தமது படையைப் பலப்படுத்தி புத்துயிரும், புதுவலுவும் சேர்க்கப்பாடுபட்டு உழைப்பதாகச் சில நாள்களுக்கு முன்னர் செய்திகள் வந்தன.

போரை முடிவுக்குக் கொண்டுவர விரும்பும் அரசாங்கம், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்று விரும்பும் அரசாங்கம் தனது முப்படைகளையும் பலப்படுத்த வேண்டிய தேவை ஏன்? நாட்டின் பெருமளவு நிதி வளத்தை விழுங்கி அவற்றுக்குப் புத்துயிர் கொடுத்து வளர்ப்பது ஏன்?

போரைத் தொடர்ந்து நடத்தும் உத்தேசம் இல்லையெனில் பெரும் பணச்செலவில் படைகளை வளர்த்துப் பலப்படுத்த வேண்டியதில்லையே. பாதுகாப்புச் செலவுக்கு முன்னரைவிட அதிக பணம் ஒதுக்கி, படைகளைப் பலப்படுத்துவது மீண்டும் போர் ஒன்றை நடத்துவதற்காகவன்றி வேறு எதற்கு?

சமாதானம் பேசிப் பார்ப்பது, தனக்கு விருப்பமான — சிங்களவருக்குச் சாதகமான— ஒரு தீர்வை முன்வைப்பது, தமிழர்கள் சார்பில் விடுதலைப் புலிகள் அதனை ஏற்கவில்லையெனில் அதனைத் திணிப்பதற்கு, அதிக வலுவுடன், கூடிய வேகத்துடன் போரைப் புதுப்பிப்பது. இத்தகைய நோக்கம் இல்லையெனில் படைகளை விஸ்தரிக்கவும், ஆயுத ஆளணி வகைகளால் பலம் சேர்க்கவும் பணத்தைச் செலவிடும் தேவை இருக்காது

மோதல் தவிர்ப்பின்போது விடுதலைப் புலிகள் தமது பலத்தை மேலும் வலுவாக்கிக் கொண்டு, பேச்சுவார்த்தையை முறித்துக்கொண்டு, மீண்டும் போருக்கு வருவார்கள் என்று தென்னிலங்கையில் ஒரு விஷமத்தனமான கருத்துப் பரபபப்பட்டுள்ளது; பதிக்கப்பட்டும் உள்ளது.

ஆனால செயலளவில் அரசாங்கமே, மோதல் தவிர்ப்பு என்ற ஓர் இடைவெளியை உருவாக்கி, அதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி படைகளுக்குப் பலம் சேர்த்து போரைத் தொடர்வதற்கு திட்டமிட்டுப் பணியாற்றுகிறது.

கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிக்கும் இது சம்பந்தமான தகவல்களை ஊர்ஜிதம் செய்யும், விதத்தில், ஆதாரப்படுத்தும் வகையில் அரசின் சமாதானப் பேச்சு அணுகுமுறை அமைந்துள்ளதையும் கவனிக்கலாம்

பூநகரிப் பாதையைத் திறக்கும் பொருட்டு இராணுவ முகாமை அகற்ற மறுப்பது. மோதல் தவிர்ப்பை கண்காணிக்க அதற்கான கண்காணிப்புக் குழுக்கள் இயங்க வகை செய்யாமல் இழுத்தடிப்பது, அந்த இழுத்தடிப்பின் மூலம் மோதல் தவிர்ப்பை போர் நிறுத்தமாக மாற்றுவதில் அக்கறை காட்டாதிருத்தல் என்பன அரசு எங்கே நிற்கிறது என்பதனை நன்றாகப் புலப்படுத்துகிறது.

சமாதானப் பேச்சு, அரசியல் தீர்வு என்று வெளியே கூறினாலும், போரை முடிவுக்கு கொண்டு வர அரசு விரும்பவில்லை. போரை தனக்கு ஓர் ஆதாரமாக வைத்திருக்க விரும்புகிறது என்பதே அந்த நிலைப்பாடாகும்; உள்நோக்கமாகும். எனவே போர் மேகம் முற்றாகக் கலைந்து அமைதி உருவாகும் என்று எப்படி எதிர்பார்ப்பது?

# தனிக்கப்பல் சேவை கோரி
# அரச அதிபருக்கு மகஜர்

## வணிகர் கழகங்களின் இணையம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 1

அத்தியாவசியப் பொருள்களைக் குடாநாட்டுக்குக் கொண்டு வருவதற்கு வசதியாக தனிக்கப்பல் ஒன்றை அமர்த்தித் தருமாறு யாழ். மாவட்ட வணிகர் கழகங்களின் இணையம் யாழ். அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

''எமது தேவையின் குறைந்தளவு தொகையை அதாவது மூவாயிரம் தொன் பொருள்களைக் கொள்ளக் கூடிய ஓர் தனிக் கப்பலைத் தந்துதவினால் தமிழீழ மக்கள் குறைந்த விலையில் பொருள்களை வாங்கக்கூடியதாக இருக்கும் என்று மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாதாந்தம் யாழ். மாவட்டத்துக்குத் தேவையான பொருள்களைக் கப்பல் மூலமாகக் கொண்டுவர 5 ஆயிரத்து 600 மெற்றிக் தொன் இடம் தேவைப்படுகிறது.

ஆனால் எமக்கு ஒதுக்கிய தொகை ஆயிரம் மெற்றிக் தொன்னாகும். அதுவும் போன முறைக் கப்பலில் 100 மெற்றிக் தொன் தான் தனியாருக்கு இடம் ஒதுக்கப்பட்டது.

இப்படி மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குறைகேள் அதிகாரிக்கு தினமும் 20 முதல் 30 முறைப்பாடுகள்

தினமும் 20 முதல் 30 முறைப்பாடுகள் பாதிக்கப்பட்டோர்களிடம் இருந்து தமக்கு வருவதாக குறைகேள் அதிகாரியான பேராசிரியர் பேட்ரம் பஸ்தியாம்பிள்ளை தெரிவித்தார்.

வாரம் இரண்டு அல்லது மூன்று முறைப்பாடுகள் பற்றிய விசாரணைகள் நடத்தப்படுவதாகவும் - கடந்த மூன்று வாரங்களில் ஐந்து முறைப்பாடுகள் பற்றிய விசாரணைகள் முடிவடைந்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

மூன்று முறைப்பாட்டாளர்களுக்கு விசாரணை முடிவில் உடனடி நிவாரணம் வழங்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

''பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து பருத்தித்துறை, அக்கரைப்பற்று, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இருந்தும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. மன்னார் மற்றும் வவுனியா பகுதிகளில் இருந்து முறைப்பாடுகள் இன்னும் கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-எ)

# வெள்ளிமுதல் மூன்று தினங்களுக்கு மாபெரும் கலை, இலக்கிய கருத்தரங்கு

## வன்னியிலிருந்தும் பேராளர்கள் வருவர்

யாழ்ப்பாணம், மார்ச் 1

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும், 'வெளிச்சம்' இதழும் இணைந்து யாழ். குடாநாட்டில் என்றுமே நடக்காதவாறு மிகப் பெரிய அளவிலான கலை இலக்கிய கருத்தரங்கு ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளன.

இக் கலை, இலக்கிய கருத்தரங்கு நாளை மறுதினம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை — தினமும் காலை 9 மணி முதல் மாலை 4-30 மணி வரை நல்லூரில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்ற, கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வன்னி மாவட்டத்தில் இருந்து சுமார் 350 கலைஞர்கள், இலக்கியப் படைப்பாளிகள் மற்றும் ஆர்வலர்கள். யாழ் மாவட்டத்திலிருந்து சுமார் 650 எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் கலை இலக்கிய ஆர்வலர்களும் இந்த மூன்று நாள் கருத்தரங்கில் பேராளர்களாகக் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது

இதற்கான விரிவான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் செய்து வருகிறது.

இம் மூன்றுநாள் கருத்தரங்கிலும் தமிழீழத்தின் பல பாகங்களையும்சேர்ந்த கலை, இலக்கியத்துறைகள் சார்ந்த அறிஞர்கள் பலரும்—

நாவல்கள், அரங்கியல், ஓவியம் பண்பாட்டு மாற்றங்கள் பாரம்பரிய கலை வடிவங்கள், விடுதலைப் போராட்ட இலக்கியங்கள், சிறுகதைகள், கலைஇலக்கியங்கள், கவிதை, இசை உட்பட பல்வேறு துறைகள் தொடர்பான உரைகளையும், கருத்துரைகளையும் வழங்குவார்கள்.

இவை தவிர கலந்துரையாடல்கள், கவியரங்கம் போன்றனவும் இடம்பெறவுள்ளன. [இ-5]

## பற்சிகிச்சை பிரிவுக்கு டாக்டர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ் பொது வைத்தியசாலை பற்சிகிச்சை பிரிவில் கடமையாற்றிய டாக்டர்கள் இருவர் வேறு இடங்களுக்கு மாற்றலாகிச் சென்றதை அடுத்து, அந்த இடங்களுக்கு புதிதாக வேறு இரு டாக்டர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

டாக்டர் திருமதி. எஸ். லோகேஸ்வரன் சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கும், டாக்டர் திருமதி வி. லட்சுமணகுமார் கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கும் மாற்றலாகிச் சென்றுள்ளனர். இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு இவர்களின் இடங்களுக்கு தெல்லிப்பளை அரசினர் ஆஸ்பத்திரியிலிருந்து டாக்டர் ஆர். கதிர்காமநாதனும், சங்கானை ஆஸ்பத்திரியிலிருந்து டாக்டர் திருமதி ஜே சிவானந்தராசாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(எ-5-15)

## உலர் உணவு விநியோகம்

நவாலி, மார்ச் 1

மானிப்பாய் ப. நோ. கூ. சங்க கிளைகளில் வறுமை நிவாரண உணவு முத்திரையின் 11ஆவது இலக்க புள்ளிக்கான உலர் உணவுப் பொருள்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

[இ-100]

## இந்து ஆரம்ப பாடசாலையில் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச். 1

1994 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசிற் பரீட்சையில் சித்தி அடைந்த யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கான பாராட்டுவிழா யாழ் இந்து ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெறும்.

விழாவுக்கு யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் திரு. கா. தவராசா தலைமை வகிப்பார்.

யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ)

# விடுதலைப் புலிகளுடன் பேசி இணக்கத்துக்கு வரத்தயார்

## முஸ்லிம் காங். எம். பி. கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 1

விடுதலைப் புலிகளுடன் முஸ்லிம் மக்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்துப் பேசி ஓர் இணக்கத்துக்கு வர முஸ்லிம் காங்கிரஸ் தயாராக இருக்கிறது.'

இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவரும், தபால் தொலைத்தொடர்பு பிரதி அமைச்சருமான ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்கும் இடையில் நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுக்களை தாமும், தமது கட்சியும் முழுமனதாக ஆதரிப்பதாகவும் அமைச்சர் அப்பொழுது தெரிவித்தார்.

(இ-5-3)

# யுத்தம் தொடருமானால் பொருளாதாரம் பாதிப்பு

## ஜனாதிபதியின் ஆலோசகர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 1

வடக்கு – கிழக்கு யுத்தம் தொடருமானால் நாடு பொருளாதாரத் துறையில் வளர்ச்சி காணுவது சாத்தியமில்லை.

ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகர் லால் ஜெயவர்த்தனா முன்கண்டவாறு தெரிவித்தார்.

வெளிநாட்டு முதலீடுகளைத் தடுக்கும் ஒரே ஒரு தீர்க்க காரணியாக இருப்பது வடக்கு – கிழக்கு யுத்தமே. யுத்தநிலை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் நம்பகத்தன்மையை உருவாக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-எ)

# அமெச்சூர் மெய்வல்லுநர் சங்க பதக்கம் சூட்டும் விழா

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ் மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் நடத்திய— மெய்வல்லுநர் சட்ட விதிகள் பற்றிய— பரீட்சையில் தேர்ச்சி பெற்றோருக்கு சான்றிதழ் வழங்கி பதக்கம் அணிவிக்கும் வைபவம் எதிர்வரும் 5 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணி முதல் யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திரு. கே. பொன்னம்பலமும், கௌரவ விருந்தினர்களாக கல்வி வலயம்— 1 இற்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி, கல்வி வலயம் 11இற்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் திரு. கே. கந்தசாமி, தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர்திரு. வெ. இளங்குமரன் ஆகியோரும் பங்குபற்றுவர்.

நிகழ்ச்சிக்கு யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத் தலைவர் டாக்டர். ரி. டபிள்யூ. ஜெயகுலராஜா தலைமை வகிப்பார் [இ]

# பிரேமாவின் உணவுக்காக 1கோடியே 57 லட்சம் ரூபா!

கொழும்பு, மார்ச் 1

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா சாகும் வரை அவரது பதவிக் காலத்தில், உணவுச் செலவாக ஒரு கோடி 57 லட்சம் ரூபா செலவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டி. பி. விஜேதுங்கா தனது ஜனாதிபதி பதவிக் காலத்தில் 24 லட்சம் ரூபாவையே உணவுக்குச் செலவிட்டார் என்று அமைச்சர் மங்கள சமரவீர நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

(இ-எ)

# ஈழத்தமிழ் அகதிகளை பயங்கரவாதிகளாக பார்த்து மோசமாக நடத்தும் தமிழக அரசு

**தமிழ் நாட்டில் உள்ள ஈழ அகதிகளில் 8 ஆயிரம் பேரை திருப்பி அனுப்பும் நடவடிக்கையை தமிழக அரசு தற்போது மேற்கொண்டுள்ளது. இதில் முதலாவது தொகுதி அகதிகளாக 502 பேர் நேற்று முன்தினம் இராமாநுஜம் கப்பல் மூலம் மன்னாருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். ஈழ அகதிகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை இக்கட்டுரை விளக்குகிறது.**

ஐரோப்பிய நாடுகளில் அனுமதிக்கப்பட்ட ஈழத்தமிழ் அகதிகளுக்கு அவர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு உதவிகள் வழங்குவதுடன் காலப்போக்கில் குடியுரிமையும் வழங்கப்படுகிறது. ஆனால் தமிழகத்தில் அனுமதிக்கப்பட்ட அகதிகளின் நிலையோ மிகமிக மோசமாக பரிதாபமாக இருக்கின்றது.

இது குறித்து தனது அதிருப்தியைத் தெரிவித்த ஐ.நா. அகதிகள் புனர்வாழ்வு ஸ்தாபனம், தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளை தனது பொறுப்பில் எடுத்துக் கொள்வதாகக் கூறியது இந்திய அரசு அதற்கு மறுப்புரை கூறிவிட்டது. ஆனால் அகதிகளை இங்கிருந்து பலிக்கடாவாகத் திருப்பி அனுப்புவதிலேயே மத்திய மாநில அரசுகள் குறியாக இருக்கின்றன. இந்திய, தமிழ்நாடு அரசுகள் ஈழ அகதிகளுக்கு அகதி என்ற அந்தஸ்து கொடுக்கவில்லை. ஏனெனில் அகதி அந்தஸ்து கொடுத்தால் சர்வதேச அகதி சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதால் அவ்வாறு செய்யாதுள்ளன.

''தமிழகத்தில் நடைபெறும் கொலை, கொள்ளைகளுக்கு அகதிகளாக தங்கியிருக்கும் ஈழத்தமிழர்களே காரணம். எனவே அகதிகள் யாவரும் உடனடியாகத் திருப்பி அனுப்பப்பட வேண்டும்'' என்று தமிழக முதல்வர் சட்டசபையில் பொறுப்பற்ற முறையில் பேசியதையடுத்து இன்று ஈழத் தமிழ் அகதிகளுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மத்திய/மாநில அரசுகள் தமக்கிடையேயான மோதல்களில் ஈழத்தமிழ் அகதிகள் பிரச்சினையை சுயநல அரசியல் நோக்கில் அணுகுவது இவ் அகதிகளின் நிலைமையை மேலும் மேலும் மோசமாக்குவதாகவே அமைகின்றது. ஈழத்தமிழ் அகதிகள் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, உலகின் பல நாடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர். ஆனால் தமிழக அரசைத் தவிர வேறு எந்தவொரு அரசும் இதுவரை ஈழத்தமிழ் அகதிகளை குற்றவாளிகளாகவோ அல்லது பயங்கரவாதிகளாகவோ சித்திரிக்கவில்லை. அதுமட்டுமல்ல, திரும்பிச் செல்லும்படி வற்புறுத்தவுமில்லை.

### பொறுப்பற்ற பேச்சு

தமிழக முதல்வரின் பொறுப்பற்ற பேச்சு, தமிழகப் பொலீஸாரின் அராஜகத்தை ஊக்கப்படுத்துவதாகவே உள்ளது. மாதக் கடைசியில் வழக்கு எதுவுமே கிடைக்கவில்லையெனில் உயர் அதிகாரிகளுக்கு கணக்கு காட்டுவதற்காக அருகில் இருக்கும் அகதி முகாமில் இருந்து அப்பாவி அகதிகளைப் பிடித்து வந்து பொய் வழக்குப் போடுவதை தமிழகப் பொலீஸார் ஒரு வாழ்க்கையாகவே கொண்டுள்ளனர். அதுமட்டுமல்ல முகாமில் காவல் புரியும் பொலீஸார் தமது இச்சைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு அகதிப் பெண்களைப் பாலியல் நடவடிக்கைகளுக்கு கட்டாயப்படுத்துகின்றனர்.

வேலூர் சிறப்பு முகாமில் ஹைதர் மகாலில் காவலுக்கு நின்ற ஒரு பொலீஸ் அங்கு அடைத்துவைக்கப்பட்ட ஒரு அகதிப் பெண்ணை பாலியல் நடவடிக்கைக்கு கட்டாயப்படுத்தினார். ஆனால் அப்பெண் அதற்கு இணங்காததினால் அப்பெண் மீது கஞ்சா கேஸ் போடப்பட்டு வேலூர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார் இவ்வாறு பொய் கேஸ் போடப்பட்டு சிறையில் அடைக்கப்படுவதால் பயந்த அகதிப் பெண்கள் வேறுவழியின்றி காம இச்சைக்கு உடன்படுகின்றனர். (10–6—92 இல் இச்சம்பவம் நடைபெற்றது.)

மணப்பாறை என்னுமிடத்தில் உள்ள அகதி முகாமில் தங்கியிருந்த இளம் பெண் ஒருவரை அம் முகாம் பொறுப்பதிகாரி அடிக்கடி அழைத்துச் சென்று லாட்ஜில் தங்கி இன்பம் அனுபவிப்பதுண்டு இவ்வாறு ஒரு அதிகாரி ஒரு அகதிப் பெண்ணுடன் தகாத உறவு கொள்வதைக் கண்டித்த 85வயது கந்தையா என்ற அகதியை புலி எனக் குற்றம் சுமத்தி சிறப்பு முகாமில் அடைத்துள்ளனர்.

பணம் பெற்றுக்கொண்டு சிலரை விடுதலை செய்வது பணம் கொடுக்க முடியாத அப்பாவி அகதிகள்மீது பொய் வழக்குப் போடுவது பொலீஸாரின் இவ்வாறான அராஜகங்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

### சிறப்பு முகாம்

ஈழத்தமிழர்கள் மீது தமிழகத்தில் இழைக்கப்படும் கொடுமைகளில் மிகக் கொடுமையானதும் வெளி உலகிற்கு அதிகம் தெரியாததுமான இன்னொன்று 'சிறப்பு முகாம்' என்பதாகும். சிறப்பு முகாம் எனும் பெயரில் சிறையை விட கொடிய சித்திரவதை முகாம்களாக தமிழகத்தில் பல பகுதிகளில் உள்ள கிளைச்சிறைகளில் நூற்றுக்கணக்கான அகதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் அடிப்படை வசதிகள் ஏதுமில்லாத நிலையில், மனித உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் வருடக்கணக்கில் எவ்வித விசாரணையுமின்றி இவ் அகதிகள் வைக்கப்பட்டிருப்பது சர்வாதிகாரி ஹிட்லரின் சித்திரவதை முகாம்களை நினைவூட்டுவதாக இருக்கிறது.

### மனித உரிமைகள் மறுப்பு

கலக்டரின் நிர்வாகத்தின் கீழ்தான் சிறப்பு முகாம் இருக்கும் என்று தெரிவித்தாலும், நடைமுறையில் பொலீஸ் அதிகாரிகளே சிறப்பு முகாம் பொறுப்பாளராக இருக்கின்றனர் இதனால் இங்கு அடிப்படை வசதிகள் மட்டுமல்ல, மனித உரிமைகளும் மறுக்கப்பட்ட நிலையே காணப்படுகின்றன. வெளிநாட்டவர்கள் சட்டப்படியே தமிழ் அகதிகள் சிறப்பு முகாம்களில் காவலில் வைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது

இவ்வாறான ஒரு சட்டத்தைக் கண்டுபிடித்து தமிழ் அகதிகளை முதன்முதலில் சிறப்பு முகாமில் அடைத்த பெருமை கலைஞர் கருணாநிதி அவர்களையே சேரும். தனது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்கு அப்பாவி அகதிகளைப் பிடித்து சிறப்பு முகாமில் அடைத்துவிட்டு புலிகளை அடைத்து விட்டேன் என்று மத்திய அரசுக்கு கணக்கு காட்டினார். அப்போது எதிர்க்கட்சியில் வீற்றிருந்த ஜெயலலிதா அவர்கள் ''பிடிக்கப்பட்டவர்கள் புலிகளல்ல, அவர்கள் அப்பாவி அகதிகள். பதவிக்கு வந்தால் அவர்களை உடனடியாக விடுதலை செய்வேன்'' என்றார். ஆனால் பதவிக்கு வந்து இவர்களை விடுதலை செய்திருந்தாலும் பரவாயில்லை, தமிழ் நாட்டில் மேலும் பல சிறப்பு முகாம்களை திறந்து அதில் நூற்றுக்கணக்கான அகதிகளை அடைத்து, ஈழத் தமிழ் அகதிகளைக் கொடுமைப்படுத்துவதில் கலைஞர் கருணாநிதிக்கு தானும் சளைத்தவர் அல்ல என்பதை காட்டியிருக்கிறார்.

### மனநோய் ஆபத்து

விசாரணைக் கைதிகளைக் கூட நீண்ட நாள்கள் அடைத்து வைக்கக் கூடாது என்க் கூறப்படும் கிளைச்சிறைச் சாலைகளிலேயே வருடக்கணக்காக சிறப்பு முகாம் எனும் பெயரில் தமிழ் அகதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் இவற்றில் நடமாடக்கூட வசதிகள் இல்லை.

பல சிறப்பு முகாம்களில் பாதுகாப்பைக் காரணங் காட்டி 24 மணி நேரமும் அறைகளிலேயே (Cell) அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் அச்சிறிய அறைக்குள்ளேயே உணவு வேண்டும் காற்றோட்டம் மற்ற சுகாதாரமற்ற அச் சிறிய அறைகளில் எவ்வித பொழுது போக்குமின்றி தனிமையில் வைக்கப்பட்டிருப்பதால் அகதிகளுக்கு மனநோய் ஏற்படும் அபாயம் உள்ளது

தமக்கிழைக்கப்பட்டிருக்கும் கொடுமைகள் குறித்து நிவாரணம் கோரி சம்பந்தப்பட்ட அகதிகள் எவ்வளவோ மனுக்கள் அனுப்பியும் போராட்டங்கள் நடத்தியும் இதுவரை எவ்விதபயனும் கிடைக்கவில்லை. விரக்தியடைந்த அகதிகள் சிலர் தற்கொலை முயற்சியில் கூட ஈடுபட்டுள்ளதாக அறிய வருகிறது.

சிறப்பு முகாம்களின் உள்ளே வைத்திய வசதிகள் எதுவுமே. கிடையாது யாருக்காவது உடல்நிலைசரியில்லையாயின் அதிகாரிகளுக்கு மனுக்கொடுத்து அனுமதி பெற்றால் பொலீஸ்காவலுடன் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். யாருக்காவது இரவிலோ அல்லது திடீரெனவோ ஆபத்தான நிலை ஏற்பட்டால் உடன் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படுவதற்கு எந்த வழியும் இடையாது.

இவ்வாறான அடக்குமுறையினால் விரக்தியடைந்த அகதிகள் தங்களைச் சொந்த நாட்டிற்கே அனுப்பி வைக்கும்படி கேட்டுள்ளனர் இன்னும் சிலர் தமது சொந்த செலவிலேயே நாடு திரும்ப தயாராக இருப்பதாகவும் அதற்கு அனுமதியளிக்கும்படியும் தமிழக அரசைக் கேட்டுள்ளனர்

சிறப்பு முகாமில் வைக்கப்பட்டிருக்கும் குடும்பத்தவர்களை பிரித்தே அடைத்து வைத்திருக்கின்றனர். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் பார்த்து பேசுவதற்கு 15 நாள்களுக்கு ஒரு முறையே அனுமதி வழங்கப்படுகிறது வேலூர் சிறப்பு முகாமில் அவ்வாறு பிரித்து வைக்கப்பட்ட 8 குடும்பங்கள் தங்களை ஒன்றாக வைக்கும்படி கூறி சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டும் அவர்களின் கோரிக்கையை அரசு இதுவரை நிறைவேற்றவில்லை

சிறப்புமுகாம்களில் அடைக்கப்பட்டிருக்கும் ஈழ அகதிகளுக்கு வசதிகள் எதுவுமே வழங்கப்படாததுடன் இவற்றைத் தமது சொந்தச் செலவில் பெற்றுக்கொள்வதற்கும் அகதிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது

வேதனை தரும் இந் நிகழ்வுகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன இது குறித்து இவ் அப்பாவி அகதிகளுக்கு நியாயம் பெற்றுக் கொடுக்க எதிர்க்கட்சிகளோ அல்லது மனிதஉரிமை அமைப்புகளோ இதுவரை முன்வராதது ஆச்சரியமாகவே உள்ளது.

(புலம் பெயர்ந்த தமிழர் நலம் நாடு சிறப்பிதழ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்
பழைய மாணவர் சங்கம்
பாடசாலை நிதிக்காக நடத்திய

**அதிர்ஷ்டலாபச் சீட்டு முடிவுகள்**

1 ஆம் பரிசு — 1043 2 ஆம் பரிசு — 2348
3 ஆம் பரிசு — 839

ஆறுதல் பரிசுகள்

1. 49 2. 481 3. 1243
4. 748 5. 819

பழைய மாணவர் சங்கம்

(சி/702)



கனடா, ரொறன்ரோ பெருநகர்
ஆசிய வானொலி
தமிழ் ஒலிபரப்பு
வானொலிநாடக சிறுகதை

**போட்டி முடிவுகள்**

நாடகப் போட்டி
1ஆம் பரிசு — அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை
2ஆம் பரிசு —
3ஆம் பரிசு —

சிறுகதைப் போட்டி
1ஆம் பரிசு — திருமதி அற்புதராணி காசிலிங்கம் (மலரன்னை)
2ஆம் பரிசு — இராம. ஜனார்த்தனன்
3ஆம் பரிசு — செல்வி மகாராஜி மகாதேவா

★ பரிசுத் தொகை அவர்களுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படும்

போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி.
-இணைப்பாளர்.

[35424]


## மரண அறிவித்தல்கள்

### சின்னையா சொக்கலிங்கம்

(ஆச்சாரியார்)

வண்ணார்பண்ணை கேசாவில்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த சின்னையா சொக்கலிங்கம் ஆச்சாரியார் 24-2-95 வெள்ளிக்கிழமை காலை சிவபதம் அடைந்து விட்டார்.

இவரது இறுதிக்கிரியைகள் 26-02-95 ஞாயிறு தவிர்க்க முடியாத காரணத்தால் நடைபெறவில்லை இன்று (1-03-95) புதன்கிழமை பிற்பகல் 3.00மணிக்கு அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
சொ. அருள்குமார் [மகன்]
(டீசல் மெக்கானிக்)
வண்ணார்பண்ணை. (35442)

### திருமதி
### தம்பிஐயா இராசலட்சுமி

புங்குடுதீவு 3ம் வட்டாரம் குறிகாட்டுவானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 15/10, இராமநாதன் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி தம்பிஐயா இராசலட்சுமி 26-2-95 ஞாயிறு சிவபதம் அடைந்து விட்டார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (1-3-95) புதன்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
க. கண்ணன்
(மகன்)
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம் (35439)

### கந்தையா ஐயாத்துரை

அளவெட்டி தெற்கு டச்சு வீதியைச் சேர்ந்தவரும் கொக்குவில் கிழக்கு பிரம்படி ஒழுங்கை இல்லத்தில் வசித்து வந்தவருமான கந்தையா ஐயாத்துரை காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், சிவஞானம் (உரிமையாளர் H'gh Tech Computer Spot (PVT) Ltd, கொழும்பு), கமலாதேவி [ஆசிரியை, பொன் பரமானந்தா மகாவித்தியாலயம்], காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் [குடியேற்ற அதிகாரி], மற்றும் சிவானந்தராசா [கனடா], சிவசேகரம் [ஹொலன்ட்], சிவயோகநாதன் [இலங்கை வங்கி, தலைமை அலுவலகம், கொழும்பு], அம்பிகாதேவி [கனடா] ஆகியோரின் அருமைத் தந்தையாரும் காலஞ்சென்ற கமலாதேவி, மற்றும் நடராசா [ஓய்வுபெற்ற கணக்காய்வு அத்தியட்சகர்], செல்வராணி, அனெற் [கனடா], வளர்மதி [ஆசிரியை கொட்டாஞ்சேனை தமிழ்மகா வித்தியாலயம்], பவானி [ஹொலன்ட்], கணேசலிங்கம் [கனடா] ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற செல்லத்துரை, மற்றும் தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை [2-3-95] வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு கொக்குவில் கிழக்கு பிரம்படி ஒழுங்கை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் தயவுடன் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
நா. நடராசா
(மருமகன்)
பிரம்படி லேன்,
கொக்குவில் கிழக்கு. [35444]

இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 01 03 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ் கோட்ட 5ஆம் வகுப்புக்கு மேற்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு திணைக்களத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### அரசின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பயிற்சி பெறுவதற்காக அரச நிறுவனங்களில் இணைக்கப்பட்டுள்ள அனைத்து செய்முறைப் பயிற்சியாளர்களையும் —

பயிற்சிக் காலம் 6 மாதங்களாக இருந்து அது கடந்தும் தற்போது பயிற்சி பெறுவதில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் அனைவரையும் —

உடனடியாக நிறுத்த வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிலுநர்கள் பதவி நீக்கப்படுவதால் யாழ். செயலகமும் ஏனைய முக்கிய திணைக்களங்களிலும் ஊழியர் பற்றாக்குறை ஏற்பட விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [அ-4]

### யுத்தக் கைதிகள் 16...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

யாளர் சந்திப்பில் தெரிவித்தனர்.

கடந்த 90ஆம் ஆண்டு முதல் விடுதலைப் புலிகளிடம் யுத்தக் கைதிகளாக இருக்கும் 15 ஸ்ரீலங்கா பொலீஸாரும்—

91 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21ஆம் திகதி கட்டைக்காட்டில் விடுதலைப் புலிகளிடம் கைதான ஸ்ரீலங்கா சிப்பாய் ஒருவருமே இன்று முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்க உள்ளனர். (உ-3)

### இராணுவ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் தரப்பினரும் வீதித் தடைகளின் இரு பக்கங்களில் இருந்தும் தகவல் பரிமாறிக் கொண்டனர் என்றும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அப்போது விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளாக இயக்கச்சி இராணுவத் தளபதி ரமேஷ், சசி ஆகியோர் பங்கு பற்றினர் என்றும் —

வீதித் தடைகளை அகற்றுவது பற்றி பின்னர் தீர்மானிக்கப்படும் என யாழ் மாவட்ட சிறப்புத் தளபதி திரு செல்வராசா பிரிகேடியர் மல்லவராச்சியிடம் தெரிவித்தார் என்றும் ரூபவாஹினி செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது

இதேவேளை இராணுவத் தளபதி பலாலி இராணுவ முகாமுக்கும் நேற்று முன்தினம் விஜயம் செய்தார் என்று தெரிவிக்கப்பட்டது

பூநகரியில் உள்ள இராணுவத்தின் முன்னணி பாதுகாப்பு அரண்கள் 500 மீற்றர் உள்ளே நகர்த்தப்பட்டதையும் அவர் பார்வையிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது [அ ஒ-7]

### யுத்தக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை பொலீஸ மா அதிபர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரி, விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் ஆகியோருக்கும் அனுப்பப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது [உ-3]

## தட்டெழுத்து சுருக்கெழுத்து பரீட்சை

தமிழீழ நிர்வாக சேவையினரின் தட்டெழுத்து, சுருக்கெழுத்து போட்டிப் பரீட்சை நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் நடைபெறும்.

அனுமதி அட்டை கிடைக்காதவர்கள் தமிழீழ நிர்வாக சேவை செயலகத்தில் இன்று மாலை 5 மணிக்கு முன் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது. (ஒ)

## கள்ளின் விலை இன்று முதல் குறைப்பு

தென்மராட்சி பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க கொத்தணிப் பகுதியில் இன்று முதல் தென்னை, பனங்கள்ளின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

தென்னங்கள்ளு ஒரு போத்தல் 13 ரூபாவாகவும் பனங்கள்ளு ஒரு போத்தல் 9 ரூபா 50 சதமாகவும் விற்பனை செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. க-117)

## தாவரவியல் பரீட்சை

அமரர் வ. சின்னத்தம்பி ஞாபகார்த்தப் பரிசிலுக்கான தாவரவியல் போட்டிப் பரீட்சைத் தொடரின் —

ஆறாவது பரீட்சை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டவாறு, யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பரீட்சை நிலையங்களிலும் இப்பரீட்சை நடைபெறும் என்றும் —

அனுமதி அட்டைகளை இதுவரை பெறாதோர் பரீட்சை ஏற்பாட்டாளர்களுடன் நாளைய தினத்துக்கு முன்னர் தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-15)

### முல்லைத்தீவு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கும்படி கடந்த 21 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் அவரை வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பதில் செயலாளர் திரு. கே. தியாகராசா கேட்டுள்ளார். [உ-3]

### தலைவர்---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளைக் கொண்டு செல்வதில் இராணுவம் தனது சிட்ட திட்டங்களை திணிக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

சமாதானக் குழுக்கள் விரைவில் செயற்பட ஆரம்பிக்கும், அமைதிப் பேச்சில் முன்னேற்றம் காணப்படும். ஆனால் அடுத்த சுற்றுப் பேச்சு எப்போது நடைபெறும் என்பதைக் கூறமுடியாது உள்ளது. — இவ்வாறு பாலபட்ட பெண்டி மேலும் தெரிவித்தார். [உ-3-6-7]

### சென்னை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அளிக்கப்பட்டுள்ளதாகவும் —

கைதிகள் தப்பிச்சென்றதை அடுத்து கடமை தவறியதாக மத்திய சிறைச்சாலை "வார்டன்கள்" 5 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அகில இந்திய வானொலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. [ஒ 7-4]

### யாழ். மாவட்டத்தில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யிட்டார்.

திருகோணமலையில் உள்ள மாகாண கல்வி அமைச்சு அலுவலகத்தில் கடந்த 21 ஆம் திகதி நடந்த இம்மாநாட்டில் மாகாண திட்டமிடல் அமைச்சுச் செயலாளர் திரு எஸ். ரங்கராஜனும் கலந்து கொண்டார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு கல்விப்பணிப்பாளர்கள் தவிர்ந்த ஏனைய கல்விப்பணிப்பாளர்கள் இம்மாநாட்டில் பங்குபற்றினர்.

யாழ் மாவட்டத்தில் தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளை உள்ளடக்கியதாக ஒரு வலயமும்—

யாழ்ப்பாணம், தீவுப்பகுதி ஆகியவற்றை உள்ளடக்கியதாக ஒரு வலயமும்—

மருதனார்மடம், பண்டத்தரிப் பகுதிகளை அடக்கியதாக ஒரு வலயமும்—

அமைக்கப்படவிருப்பதாக திரு. தியாகராஜா அந்த மாநாட்டில் தெரிவித்தார்.

இந்தப் புதிய வலயங்களை அமைப்பதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளதாகவும்—

விரைவில் அவை செயற்படும் என்றும்— அவர் மேலும் கூறினார்.

இலங்கையில் தற்போது மொத்தம் 50 கல்வி வலயங்கள் செயற்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் புதிதாக உருவாகும் வலயத்துடன் சேர்த்து இந்த எண்ணிக்கை 51 ஆக உயரும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

### ஜனாதிபதியை சந்திக்க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

ஜனாதிபதியைச் சந்தித்து அரசின் நிலைப்பாடு மற்றும் கொள்கைகள் சம்பந்தமான [illegible] இருப்பதால்—

பல்வேறு [illegible] அமைச்சர்கள் தங்கள் அறிவுக்கு எட்டியபடி பதிலளிப்பதாகவும் அடபத்திரிகை தெரிவித்தது. (உ-10)

## நரோமா சேவை 3 தடவைகள்

திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் 'நரோமா' கப்பல் இம்மாதம் மூன்று பயணிகள் சேவைகளை நடத்தவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு இந்த சேவைகளை நடத்தும் என்றும் —

முதலாவது கப்பல் சேவை இம்மாதம் 9 ஆம் திகதி நடைபெறும் என்றும் — புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு யாழ். செயலகத்துக்கு அறிவித்துள்ளது.

கொழும்பில் இருந்து இக்கப்பலில் செல்ல விரும்புவோர் கொழும்பில் உள்ள புனர்வாழ்வு அமைச்சு அலுவலகத்திலும் —

திருகோணமலையில் உள்ள பிரதேச செயலகத்திலும் — அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### சந்திரிகாவுக்கு---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பது கண்கூடு.

★ கடல் வலயத் தடைச் சட்டத்தால் மீனவர்கள் தமது நாளாந்த வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாமல் இருக்கின்றனர் என்பது உண்மையே.

★ பொதுமக்கள் சோதனைக்கு உட்படாமல் சென்று வருவதற்கு ஒரு பாதை அவசியம் என்பதால் பூநகரி முகாமை அகற்ற வேண்டும் என்றபுலிகளின்கோரிக்கையை ஒருவரால் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

—இவ்வாறு ஜோர்ஜ் ஆனி பதிலளித்தார். [உ-1-3-7]

### பொருளாதாரத்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்போதிருந்த அரசு எமது விடுதலைக்காக எதுவும் செய்யவில்லை.

சந்திரிகா பதவிக்கு வந்த பின் எமது விடுதலைக்கு உதவுவார் என நாம் நம்பினோம். நூறுக்கு மேற்பட்ட கடிதங்களை ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் ரத்வத்தைக்கும், பொலீஸ் மா அதிபருக்கும் நாம் அனுப்பினோம். அந்தக் கடிதங்களுக்கு அவர்கள் எந்தவித பதிலையும் அனுப்பவில்லை.

எமது விடுதலை தொடர்பாக அரசு விடுதலைப் புலிகளுடன்கூட பேசவில்லை.

சந்திரிகா பதவிக்கு வந்த பின் விடுதலைப் புலிகளின் தேசிய தலைவர் வே. பிரபாகரன் நல்லெண்ண அடிப்படையில் எம்முடன் இருந்த பலரை விடுதலை செய்துள்ளார்.

ஆனால் எமது விடுதலை தொடர்பாக அரசு எந்தவித நடவடிக்கையையும் - எடுக்கவில்லை. இதையிட்டு நாம் கவலையும், ஏமாற்றமும் அடைந்துள்ளோம்.

வடக்கு — கிழக்கு மாகாணம் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை முற்றாக நீக்கினால் எம்மை விடுதலை செய்வதாக விடுதலைப் புலிகள் கூறியுள்ளனர்

அரச தூதுக்குழுவினர் 3 ஆம் கட்டப் பேச்சுக்கு யாழ்ப்பாணம் வந்த சமயம் அந்தத் தூதுக்குழுவின் தலைவராக வந்த பாலபட்ட பெண்டியை சந்தித்து வட.— கிழக்குக்கான பொருளாதாரத் தடையை நீக்கி எமது விடுதலைக்கு உதவுமாறு கேட்டோம்.

தாம் கொழும்பு திரும்பியதும் ஜனாதிபதி சந்திரிகாவுடன் கதைத்து விடுதலைக்கு உதவுவதாக வாக்குறுதி அளித்தார். ஆனால் அவர் கொழும்பு சென்று பல வாரங்கள் ஆகியும் ஒன்றும் நடக்கவில்லை.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ள இந்த நேரத்திலாவது — யுத்தம் ஆரம்பமான சமயம் கைதான நாம் விடுதலையாவோம் என்று எதிர்பார்த்தோம். யுத்தம் நின்று விட்டது. ஆனால் நாம் "ஜெயிலில்" தொடர்ந்து உள்ளோம்.

எமது விடுதலைக்காக சர்வதேசமும், ஏனைய அமைப்புக்களும் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நிலையை உருவாக்கும் நோக்குடன் எமது போராட்டத்தை ஆரம்பிக்கிறோம்.

எமது விடுதலைக்காக —

குடாநாடு மீதான பொருளாதாரத் தடையை முற்றாக நீக்க வேண்டும் என்ற புலிகளின் கோரிக்கையை அரசு நிறைவேற்ற முனைந்தால், அதற்குத் தடையாக தென் இலங்கை மக்களும், பொலீஸ் மற்றும் முப்படையினரும் இருக்கக் கூடாது என்று அவர்களிடம் நாம் மன்றாட்டமாகக் கோருகிறோம் — என்று அவர் தெரிவித்தார். (உ-3)

## யாழ். குடாநாட்டிற்கு மாவட்ட கல்விப் பணிமனை

யாழ்ப்பாணம், மார்ச். 1

கல்வி நிர்வாக அமைப்பில் விரைவில் கொண்டுவரப் படவிருக்கும் மறு சீரமைப்பின் கீழ்—

யாழ். மாவட்டத்தில் மாவட்ட கல்விப்பணிமனை ஒன்று செயற்படவிருப்பதாக தெரியவந்தது.

இந்தப் பணிமனை ஆசிரியர்களின் சம்பளம் மற்றும் ஆசிரியர்களின் சுயவிவரக் கோவைகள் தொடர்பான நிர்வாக வேலைகளை மட்டும் மேற்கொள்ளும் என்றும்—

இந்தப்பணிமனைக்கு புறம்பாக அமையவிருக்கும் வலயப்பணிப்பாளர் அலுவலகங்களும், வட்டாரக் கல்வி அலுவலகங்களும் கல்வி அபிவிருத்தி தொடர்பான ஏனையபணிகளை மேற்கொள்ளும் என்றும் — தெரியவருகின்றது.

தற்போதுள்ள கோட்ட அலுவலக முறை முற்றாக நீக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பானவர்கள் நிர்வாகப்பணிகளில் ஈடுபடும் தற்போதைய நடைமுறையை முற்றாக நீக்கும் வகையில் அமையவிருக்கும் புதிய திட்டத்தின்படி வலய, கோட்ட அலுவலகங்கள் முற்று முழுதாக கல்வி அபிவிருத்தி தொடர்பான பணிகளை மேற்கொள்ள முடியும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)


**கண் சத்திர சிகிச்சை முகாம்-6**

யாழ். றோட்டறி கழகத்தின் ஆதரவில் சங்கானைப் பகுதி மக்களுக்காக நடைபெறும்
இரண்டாவது கண் சத்திர சிகிச்சை முகாம்
[CATARACT SURGERY CAMP]

எதிர்வரும் 5-3-95 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு சங்கானை அரசினர் வைத்தியசாலையில் நடைபெறும். ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டவர்கள் 2.3.95 வியாழன் காலை 10 மணிக்கு சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு சமுகம் அளிக்கும்படி வேண்டப்படுகிறார்கள்.

சமூக சேவை இயக்குநர்
யாழ். றோட்டறி கழகம்.

[சி/701]


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 18 — 06 — 1925
உதிர்வு: 30 — 01 — 1995

### திருமதி தெ. செல்லையா

(இளைப்பாறிய இராமநாதன் கல்லூரி கனிஷ்டபிரிவு அதிபர்)

பாசத்திற்கோர் இருப்பிடமாய்,
பண்பிற்கோர் உத்தமியாய்
வாழ்ந்த நீங்கள் மறைந்து
ஒருதிங்கள் சென்றதம்மா.

அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து பல உதவிகளையும் புரிந்த அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்வதுடன், இன்று (01-03-1995) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்ளும்படி அனைவரையும் வேண்டுகிறோம்.

ந. தர்மரத்தினம் (சகோதரர்)
மைத்துனரும்

"வசந்தம்",
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (35443)

## மரண அறிவித்தல்

### திருமதி
### பாலசுந்தரநாயகி வேதலிங்கம்

[சண்முகராசா]

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், தற்போது கே.கே.எஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசுந்தரநாயகி வேதலிங்கம் — சண்முகராசா நேற்றிரவு காலமானார்.

இவர் வேதலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பையா தங்கம்மா ஆகியோரின் ஏகபுதல்வியும், காலஞ்சென்றவர்களான தம்பையாபிள்ளை செல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், இராஜேஸ்வரி, விநாயகலிங்கம், தயாநந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் அன்பு மாமியாரும், மங்களேஸ்வரன், அழகியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற செல்லத்துரை, மற்றும் சரோஜா, இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், பவீந்திரன், கஜேந்திரன், சுஜநிதி, பவநிதி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு இன்று [01-03-95] பிற்பகல் 3 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.த. மங்களேஸ்வரன்
(சகோதரன்)
சத்திரச்சந்தி,
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். [33445]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org